www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஜூலை 2006

ரூ. 5.00



## எங்கே போகிறது இந்தியப் பொருளாதாரம்?

படிப்பகம்

www.padippakam.com

## வியட்நாமில் மைலாய்! ஈராக்கில் ஹதிதா!

# அமெரிக்காவின் தொடரும் போர்க்குற்றங்கள்

ஈராக்கின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஹதிதா என்ற சிறு நகரம், அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராடும் சன்னி பிரிவு முசுலீம் போராளிகளின் செல்வாக்கு நிறைந்த பிராந்தியம். இதன் காரணமாகவே ஹதிதா, அமெரிக்க இராணுவத்தின் தீவிர கண்காணிப்பின் கீழ் இருந்து வருகிறது. கடந்த ஆண்டு நவம்பர் 19 அன்று அதிகாலை நேரத்தில் இந்நகரைச் சேர்ந்த 23 ஈராக்கியர்கள், துப்பாக்கி தோட்டாக்களால் துளைக்கப்பட்டு இறந்து போனார்கள். அகால மரணமடைந்த இந்த 23 பேரில், மூன்று குழந்தைகள், ஏழு பெண்கள், மற்றும் நடக்கவே முடியாத முதியவர் ஒருவரும் அடங்குவார்கள்.

இந்தச் சம்பவம் குறித்து மறுநாள் நவம்பர் 20 அன்று அறிக்கை வெளியிட்ட அமெரிக்க இராணுவம் "இறந்து போனவர்களுள் 8 பேர் தீவிரவாதிகள்; 15 பேர் பொதுமக்கள். தீவிரவாதிகளுக்கும், அமெரிக்க இராணுவத்துக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தபொழுது, அதனிடையே மாட்டிக் கொண்டு இந்த 15 பேர் இறந்து போனதாக"க் குறிப்பிட்டுள்ளது. ஈராக்கில் அன்றாடம் நடக்கும் உயிர்ப் பலிகளில் இதுவும் ஒன்று எனக் கருதி இதனை உலகம் மறந்துவிட்ட நிலையில், இப்பொழுது - இச்சம்பவம் நடந்து ஏழு மாதங்கள் கழித்து - உண்மைகள் மெதுவாகக் கசியத் தொடங்கியுள்ளன.

நவம்பர் 19 அன்று அதிகாலையில் ஹதிதா நகரையொட்டிச் செல்லும் நெடுஞ்சாலையில் ரோந்து சென்று கொண்டிருந்த அமெரிக்க இராணுவக் கவச வாகனங்களுள் ஒன்று, கண்ணிவெடித் தாக்குதலுக்கு உள்ளாகி உருக்குலைந்து போனது. இத்தாக்குதலில் 20 வயதான டெர்ரஸஸ் என்ற அமெரிக்க இராணுவச் சிப்பாய் இறந்து போனதோடு, இரண்டு சிப்பாய்கள் காயமடைந்தனர். இதற்குப் பழிக்குப் பழிவாங்கும் வெறியோடு, அந்நெடுஞ்சாலையையொட்டி அமைந்துள்ள வீடுகளுக்குள் புகுந்து அமெரிக்க இராணுவம் கண்மூடித்தனமாகச் சுட்டதன் விளைவாகத்தான் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டு 23 பேர் இறந்து போனார்கள்.

இச்சம்பவம் குறித்து அமெரிக்க இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் நெடுஞ்சாலையில் கண்ணிவெடி வெடித்ததும், அதில் சிக்கி ஒரு சிப்பாய் இறந்து போனது மட்டும்தான் உண்மை. தீவிரவாதிகளோடு நடந்த துப்பாக்கி சண்டை, அவர்களிடமிருந்து இரண்டு ஏ.கே.47 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டது போன்றவை அனைத்தும், தனது போர் குற்றங்களை மறைக்க அமெரிக்கா சோடித்துள்ள கட்டுக்கதை என்பதை நிரூபிப்பதற்கு ஏராளமான சாட்சியங்களும், ஆதாரங்களும் உள்ளன.

**அமெரிக்க இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள். பொம்மைகளோடு உறங்கிக் கொண்டிருந்த சிறுமிகூட, அமெரிக்க இராணுவத்தின் கொலைவெறிக்குத் தப்பவில்லை.**



ஒன்பது வயதான இமான் வாலீத் என்ற சிறுமியின் வீடு, கண்ணி வெடி தாக்குதல் நடந்த இடத்தில் இருந்து 150 மீட்டர் தூரத்தில் உள்ளது. அமெரிக்க இராணுவம் இச்சிறுமியின் வீட்டுக்குள் புகுந்து சுட்டபொழுது, காலில் குண்டு காயத்தோடு மயிரிழையில் உயிர் பிழைத்து விட்டாள் இமான் வாலீத்.

"தெருவில் பயங்கரமான வெடிச்சத்தம் கேட்டவுடனேயே, என் அப்பா குர்ஆனை எடுத்துக் கொண்டு பக்கத்து அறைக்குச் சென்றுவிட்டார். துப்பாக்கிச் சத்தம் கேட்கும் பொழுதெல்லாம், தனியாகப் போய், குடும்பத்தினருக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக் கூடாது என அல்லாவிடம் வேண்டுவது அவர் வழக்கம். நான், என் தம்பி, அம்மா, தாத்தா, பாட்டி, மாமா, அத்தை அனைவரும் படுக்கை அறையில் பதுங்கிக் கொண்டோம்.

நாங்கள் அனைவரும் இரவு உடைகளை அணிந்திருந்ததால், வீட்டை விட்டு வெளியே செல்ல விரும்பவில்லை. எங்கள் வீட்டிற்குள் துப்பாக்கிகளோடு புகுந்த சிலர், அப்பா பிரார்த்தனை செய்து கொண்டிருந்த அறைக்குள் நுழைந்தனர். மறுநிமிடம், சடசடவெனத் துப்பாக்கி வெடிக்கும் சத்தம் அந்த அறையில் இருந்து கேட்டது.

நாங்கள் பதுங்கியிருந்த அறைக்குள் புகுந்தவர்களின் முகத்தை என்னால் பார்க்க முடியவில்லை. நீட்டிக் கொண்டிருந்த துப்பாக்கி முனையை மட்டும்தான் என்னால் பார்க்க முடிந்தது. அவர்கள் முதலில் எனது தாத்தாவின் நெஞ்சில் சுட்டார்கள். பிறகு அவரது தலையை துப்பாக்கி குண்டுகள் சல்லடையாகத் துளைத்தன. அடுத்து, என் பாட்டி சுட்டுக் கொல்லப்பட்டார். இதன் பிறகு, அறையின் மூலையில் பதுங்கியிருந்த என்னையும், என் தம்பியையும் நோக்கி அவர்கள் திரும்பினர். எனது இரண்டு அத்தைகளும், மாமாக்களும் எங்களைச் சுற்றி கவசம் போல நின்று கொண்டு, எங்கள் இருவரின் உயிரைக் காப்பாற்றும் முயற்சியில் குண்டடிபட்டுச் செத்துப் போய் விட்டனர்.

எனது வலது காலிலும், என் தம்பியின் தோள்பட்டையிலும்

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 21**

**இதழ் 9**

**ஜூலை 2006**

***உள்நாடு***
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

***வெளிநாடுகள்***
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**



***படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்***

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**

**தொலைபேசி: 94446 32561**


## மறுகாலனியாதிக்கத் தாக்குதல்:
# ஏலக் கம்பெனியும் துரோகக் கம்பெனியும்

**நா**ட்டை மீண்டும் காலனியாக்குவதில் போலி கம்யூனிஸ்டுகளின் ஆதரவோடு நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி வருகிறது, ஐக்கிய முற்போக்கு ஏலக் கம்பெனி. சில்லறை வியாபாரத்தில் அந்நிய நேரடி முதலீட்டிற்குத் தாராள அனுமதி, சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் பன்னாட்டு நிறுவனங்கள் தம் விருப்பம்போல் சட்டங்கள் - விதிகளை வகுத்துக் கொண்டு 'கும்பினியாட்சி' நடத்தத் தாராள அனுமதி, இலாபமீட்டும் விமான நிலையங்கள் தனியார்மயமாக்கம், மரபீணி மாற்றம் செய்யப்பட்ட உணவு தானியங்களைச் சோதனை முறையில் இந்தியாவில் பயிரிடப் பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு அனுமதி - என அடுத்தடுத்து உலக வர்த்தகக் கழகத்தின் காலனியாட்சிக்குத் தரகர்களாகச் செயல்பட்டு வரும் காங்கிரசு கூட்டணி, இப்போது இலாபத்தில் இயங்கிவரும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் (என்.எல்.சி.) மற்றும் தேசிய அலுமினிய நிறுவனம் (நால்கோ) ஆகிய பொதுத்துறை நிறுவனங்களின் 10 சதவீதப் பங்குகளைத் தனியாருக்குத் தாரைவார்க்க முடிவு செய்துள்ளது.

இதுதவிர, பெட்ரோல்-டீசல் விலையேற்றத்தின் மூலம் மிகப் பெரிய பொருளாதார தாக்குதலை இக்கூட்டணி அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதன் விளைவாக சரக்குக் கட்டணங்கள் உயர்ந்து, அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தாறுமாறாக உயர்ந்துள்ளன. அதைத் தொடர்ந்து பணவீக்கம் யானைக்காலாக வீங்கிக் கொண்டே போகிறது. விவசாயம் நாசமாக்கப்பட்டு அரசு கொள்முதலும் நிறுத்தப் பட்டுள்ளதால் சேமிப்புக்கான உணவு தானியப் பற்றாக்குறை நீடிக்கிறது. இதைக் காட்டி, தட்டுப்பாட்டையும் விலையேற்றத்தையும் கட்டுப்படுத்துவதாகக் கூறிக் கொண்டு அரிசி, கோதுமை, சர்க்கரை ஆகியவற்றை தனியார் முதலாளிகள் இறக்குமதி செய்து கொள்ள தாராள அனுமதி அளித்துள்ளதோடு, இதற்குச் சுங்கவரி விலக்கும் அளித்துள்ளது, மைய அரசு.

இருப்பினும், ''நாட்டை வல்லரசாக்கும் பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கு இடதுசாரிகள் முட்டுக்கட்டை போட்டு வருவது வறட்டுத்தனமானது; 15 ஆண்டுகளாகியும் தனியார்மயக் கொள்கையை முழுமையாக செயல்படுத்த முடியவில்லை; மன்மோகன் சிங்குக்கு மார்க்சிஸ்டுகள் குடைச்சல்'' என்றெல்லாம் ஏகாதிபத்திய கைக்கூலிகளும் பத்திரிகைகளும் பீதியூட்டுகின்றனர். ஆனாலும், கடந்த ஈராண்டு காலத்தில் ஐ.மு. கூட்டணி அரசு எந்தவொரு தனியார்மய - தாராளமயக் கொள்கையையும் 'இடதுசாரி'களுக்கு அஞ்சி முடக்கி வைத்துவிடவில்லை. மாறாக, அதை முன்னிலும் தீவிரமாக்கி வருவதை நாடே நன்கறியும். இத்தனைக்குப் பிறகும் இந்த கைக்கூலி அரசுக்கு முட்டுக் கொடுத்து ஆதரிப்பதை போலி கம்யூனிஸ்டுகள் நிறுத்தவுமில்லை.

ஐ.மு. கூட்டணி அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளை முறியடிக்கப் போவதாக நாடகமாடும் போலி கம்யூனிஸ்டு துரோகக் கம்பெனி அடையாள எதிர்ப்பு, கண்டன அறிக்கை, நாடாளுமன்றத்தில் வெளிநடப்பு, அறப்போர் என்பதற்கு மேல் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதுமில்லை. பெட்ரோல் விலையேற்றத்தை எதிர்த்து நாடெங்கும் போராட்டம் நடத்திய போலி கம்யூனிஸ்டுகள், ஐ.மு. கூட்டணி அரசின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பெட்ரோல் விலையேற்றம் பற்றி வாயே திறக்கவில்லை. எந்த தனியார்மயக் கொள்கைகளை எதிர்ப்பதாகச் சவடால் அடிக்கிறதோ, அவற்றையே மாநிலத்தைத் தொழில்மயமாக்குவது என்ற பெயரால் மே.வங்க போலி கம்யூனிஸ்டு ஆட்சி பகிரங்கமாகவே செயல்படுத்தி வருகிறது. சில்லறை வணிகத்தில் அந்நிய நேரடி முதலீட்டை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டே, ''வால்மார்ட்'' நிறுவனத்திடம் பேரங்காடிகளைத் தமது மாநிலத்தில் தொடங்கக் கோரி பேச்சு வார்த்தை நடத்துகிறார், மே.வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா.

ஒருபுறம் கைக்கூலி காங்கிரசுக் கூட்டணி ஆட்சியை ஆதரித்துக் கொண்டே, இன்னொருபுறம் காங்கிரசு - பா.ஜ.க.வுக்கு மாற்றாக மூன்றாவது அணி கட்ட முயற்சிப்பதாக இப்போலி கம்யூனிசத் துரோகிகள் பூச்சாண்டி காட்டுகின்றனர். ஆனால், நாட்டில் இருப்பது ஒரே துரோக அணிதான். அது மறுகாலனியாதிக்கக் கொள்கைகளை வேறுபட்ட வழிமுறைகளில் செயல்படுத்தும் ஓட்டுக் கட்சிகளின் ஓரணி. அதற்கு எதிராக நாட்டுப்பற்றும் ஏகாதிபத்திய - காலனியாதிக்க எதிர்ப்பும் கொண்ட புரட்சிகர மக்கள் முன்னணியைக் கட்டியமைத்துப் போராட வேண்டியதே இன்றைய தேவையாக உள்ளது. •

www.padippakam.com

# 'வல்லரசாகும்' இந்தியா கையேந்தியாகும் மக்கள்

"இந்தியா ஒரு பொருளாதார மேல்நிலை வல்லரசாக உருவாகி வருகிறது" என்ற செய்தி, ஊடகங்களில் நிரம்பி வழிகின்றது. குலுக்கித் திறக்கப்பட்ட "பீர்" பாட்டிலைப் போல இந்தியப் பொருளாதாரத்தின் "வளர்ச்சி" குறித்த மகிழ்ச்சியில் பத்திரிகைகள் புள்ளி விவரங்களால் பொங்கி வழிகின்றன.

- தொடர்ந்து நான்காண்டுகளாக மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7 சதவீதம். அடுத்தடுத்த மூன்றாண்டுகளாக ஏற்றுமதியின் அதிகரிப்பு 20 சதவீதம். கூட்டுப் பங்கு நிறுவனங்களின் கடன்கள் 30 சதவீதத்திற்கும் மேலாகும்.
- முதலீடுகளின் அதிகரிப்பு 40 சதவீதம்; புதிய திட்டங்கள் பல்வேறு முக்கிய துறைகளையும் கடந்து பரவுகின்றன. 2006-ஆம் ஆண்டுக்கான அடிப்படைக் கட்டுமானச் செலவுகள் 95,000 கோடி ரூபாய்கள் - அதாவது இரண்டு மடங்கு.
- கடந்த ஐந்தாண்டுகளில் உச்சபட்சமாக 2005-இல் மட்டும் சம்பள உயர்வு 14 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. 2005-2006 ஆம் ஆண்டில் மிகப் பெரும் அளவிலான வேலை வாய்ப்புகள் அதிகரிப்பு, நகர்ப்புறக் குடும்பங்களுக்கான வேலை மற்றும் நிதி உத்திரவாதங்களை அளித்துள்ளன.
- வீட்டு வசதிக் கடன்களின் அதிகரிப்பு 56 சதவீதம்; நுகர்வோர் கடன் அதிகரிப்பு 40 சதவீதம்; பங்குச் சந்தையிலும் வீடு - வீட்டுமனைத் தொழிலிலும் ஏற்பட்டுள்ள செழிப்பு, விருப்பம் போல செலவிடச் செய்துள்ளது.
- உலகிலேயே இரண்டாவது பெரிய சந்தையாக இந்தியாவை மாறச் செய்யுமளவு செல்பேசிகளின் அதிகரிப்பு 53% சதவீதம். விமானச் சேவை மற்றும் மோட்டார் வாகன தொழில்களின் செழிப்பு, உலகிலேயே மிகவும் இளம்பிரிவு உழைப்புச் சக்தியும் இந்த முன்னேற்றத்தை சாதித்துள்ளன.

- இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சியைப் பத்திரிகையாளர்கள் மேற்கண்டவாறு தொகுத்துள்ளனர்.

உலகின் முன்னணிப் பன்னாட்டுத் தொழில் கழகங்களின் தலைவர்கள் அனைவரும் இந்தியப் பொருளாதார வளர்ச்சி குறித்துப் பிரமித்துப் போயிருக்கிறார்களாம்.

"கடந்த 15 ஆண்டுகளில் பொருளாதாரத்தில் இந்தியா காட்டிய வேகம் அசாதாரணமானது" என்கிறார் உலக வங்கியின் தலைவர் பால் வுல்போவிட்ஜ்.

"உலகமயமாக்கத்தின் குவி மையமாக இந்தியா மாறுவதற்குத் தகுந்தவாறு அதன் நட்சத்திர பலன்கள் கூடி வருகின்றன" என்கிறார் சர்வதேச நிதி நிறுவனத்தின் பொருளாதார ஆலோசகர் ரகுராம் ராஜன்.


"மென்பொருள் தொழில் வித்தகர்களின் பிரமிக்கதக்க மையத்தை இந்தியா கொண்டிருக்கிறது. இதிலிருந்து உலகம்

**மேட்டுக் குடியினரின் நுகர்வு வெறியைத் தீர்ப்பதற்காகவே வந்துள்ள பேரங்காடிகள் (மால்கள்), வர்த்தகப் புரட்சியாகத் திரித்துக் காட்டப்படுகிறது.**






படிப்பகம்



ஏழ்மையும், வளர்ச்சியும் - வல்லரசாகக் கனவு காணும் இந்தியாவின் எதிர் எதிரான முகங்கள்.

ஆதாயம் பெற வேண்டும்'' என்கிறார், உலக மென்பொருள் ஏகபோக முதலாளி பில்கேட்ஸ்.

''இந்தியா ஒருநாள் உலகிலேயே அதிவேக வளர்ச்சியுடைய நாடாக இருக்கும்'' என்கிறார் - வெர்ஜின் அட்லாண்டிக் விமான சேவை நிறுவனத்தின் தலைவர் சர் ரிச்சர்டு பிரான்சன்.

''இந்தியா மிக வேகமாகப் பொருளாதார வளர்ச்சியுடைய நாடுகளில் ஒன்று; ஆசியாவின் வளர்ச்சியை உந்திச் செல்லக் கூடியது'' என்கிறார், ஜெர்மனியின் சீமன்ஸ் நிறுவனத் தலைவர் லாஸ் லெயின்ஃபீல்டு.

''உலகின் முன்னணி தொழில்நுட்ப மையங்களில் ஒன்றாக இந்தியா உருவாகி வருகிறது'' என்கிறார் கணினித் தொழிலில் முன்னணி நிறுவனமான இண்டெல் தலைவர் கிரைக் பேரட்.

''ஏழை தேசங்களின் வளர்ச்சித் தீர்வுகளின் சோதனைச் சாலையாக இந்தியா விளங்க முடியும்'' என்கிறார் பிலிஃப்சு நிறுவனத் தலைவர் ஜிரார்டு லெய்ஸ்டர்லீ.

— பன்னாட்டுத் தொழில் கழகங்கள் இந்தியப் பொருளாதாரம் குறித்து இவ்வாறான கருத்துக்கள் வைத்திருப்பதால் அந்நிய நேரடி முதலீடும், அந்நியத் தொழில் முதலீடும் ஏராளமாக வந்து குவிகின்றன. இதனால் பங்குச் சந்தைக் குறியீடு எண் 12,000 அளவைத் தாண்டிவிட்டது.

இதோடு அந்நியச் செலாவணிக் கையிருப்பு பல ஆயிரம் கோடி ரூபாயாகக் குவிந்திருக்கிறது. இதுவரை வெளிநாட்டில் வாழும் இந்தியர் அனுப்பி வைக்கும் தொகையே அந்நியச் செலாவணி கையிருப்பில் முக்கியமாக இருந்தது. இப்போது மொத்தக் கையிருப்பில் இது மிகச் சிறிய அளவாகி விட்டது; ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதால் முக்கியமாக அந்நியச் செலாவணி கையிருப்பு மலையளவு உயர்ந்துவிட்டது.

இந்த ஆண்டு மட்டும் மென்பொருள் ஏற்றுமதியால் டாடா கன்சல்டன்சி, இன்போசிஸ், சத்யம், விப்ரோ போன்ற மென்பொருள் ஏற்றுமதி நிறுவனங்கள் ஒரு இலட்சம் கோடி ரூபாய் இலாபமீட்டக் கூடும். தகவல் தொழில் நுட்பம் மற்றும் அது சார்ந்த தொழில்களில் மட்டும் அடுத்த ஐந்தாண்டுகளில் 60 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கக் கூடும்.

இவையெல்லாம் உலகில் மிக வேகமாக வளரும் பத்து பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியப் பொருளாதாரம் வளர்ந்துள்ளதைக் காட்டுகின்றன.

இந்தப் புள்ளிவிவரங்கள் உண்மைதான் என்றாலும், இந்தியா உடனடியாக இல்லாவிட்டாலும், வளரும் நாடுகளில் முதலிடத்தைப் பிடிக்காவிட்டாலும், சீனாவுக்கு அடுத்து இரண்டாம் இடத்துக்கு உயர்ந்துவிடும் என்றாலும் — இந்தியப் பொருளாதார வளர்ச்சி எத்தகையது? அதன் பலன்களை எந்தப் பிரிவினர் அறுவடை செய்து கொள்கின்றனர்? யாருடைய நலன்களுக்காக இந்தியப் பொருளாதாரம் திட்டமிடப்படுகிறது? என்பது முக்கியமானதாகும்.

**இந்தியப் பொருளாதாரம் வட்டாரரீதியாக, வர்க்க ரீதியாக, பாலியல்ரீதியாக, நகர்ப்புற-கிராமப்புற வேறுபாடுரீதியாக ஒரு சார்பாகக் கோணித்துப் போகிறது. அனைத்துத் தரப்புகளின் வளர்ச்சி, முன்னேற்றத்துக்கானதாகப் பொருளாதாரம் திட்டமிடப்படுவதில்லை.**

கடந்த 2005-ஆம் ஆண்டின் நவம்பருக்குள் 2.341 கோடி பேர் புதிதாக செல்பேசி வாடிக்கையாளர்களாகி இருக்கிறார்கள். இணையத் தளங்களில் மேயும் ஏழு இலட்சம் பேர் அகன்ற அலைவரிசை கணினி இணைப்புகள் பெற்றார்கள். 45 இலட்சம் கணினிகள் விற்கப்பட்டன. 53,982 கோடி ரூபாய் அளவு சேமிப்பு உயர்ந்திருக்கிறது. 9,000 பேர் புதிய கோடீசுவரர்களாகியிருக்கிறார்கள். கார்

www.padippakam.com

கள், இரண்டு சக்கர வாகனங்களின் உற்பத்தியும் விற்பனையும் பல்கிப் பெருகியுள்ளது.

தங்க நாற்கரச் சாலைகளால் இந்தியாவின் பெருநகரங்களை இணைப்பதும், விமான நிலையங்கள் நவீனப்படுத்தப்படுவதும், துறைமுகங்கள் விரிவுபடுத்தப்படுவதும் நிறைவுறும் நிலையை எட்டி விட்டன. சுற்றுலா, பொழுதுபோக்கு, ஃபாசன் பொருட்கள், கல்வி, மருத்துவம் எல்லாவற்றிலும் உலகத்தரம் வந்துவிட்டது.

எல்லாம் சரி; ஆனால் இவையாவும் நடுத்தர மேட்டுக்குடி மக்களுக்குச் சாதகமானவை, நாட்டின் மிகப்பெரும் தரகு அதிகார முதலாளிகள், பெரும் பண்ணையார்கள் ஆகியவர்களோடு, அந்நிய பன்னாட்டுத் தொழில், வர்த்தக மற்றும் நிதிக் கழகங்களின் கொள்ளையை விரிவுபடுத்தும் வகையிலானவைதாம்.



சந்தையின் சூதாட்டத்தில் சிக்க வைக்கப்பட்டுள்ள இந்திய விவசாயிகள், தங்களின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காததால் கடனில் மூழ்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சீனா போன்ற நாடுகளில் பொருளாதார வளர்ச்சி என்பது முதலீடு அடிப்படையிலானதாக இருக்கும் அதேசமயம், இந்தியப் பொருளாதார வளர்ச்சி நுகர்வோர் சந்தை சார்ந்ததாகவே இருக்கிறது. அதாவது, இந்தியாவின் 10 கோடி குடும்பங்களின் ஆண்டு வருமானம் இரண்டு முதல் 10 இலட்சம் ரூபாய் அளவுக்கு உள்ளது! இது பல ஐரோப்பிய நாடுகளின் சந்தையைவிடப் பெரியதாகும். இந்தக் குடும்பங்களின் நுகர்வுத் தேவைக்கான பொருளாதாரத் திட்டமிடுதல்கள் தாம் இப்போது நடக்கின்றன.

அதேபோல, கடந்த பத்தாண்டுகளில் உள்நாட்டு மொத்த உற்பத்தி வளர்ச்சி விகிதம்6.5 சதவீதத்திற்கு மேலிருந்தாலும், கிராமப்புற விவசாய வளர்ச்சி 2 சதவீதம் அளவுக்கு மிகக் குறைவாகவே உள்ளது. நாட்டின் 60 சதவீத உழைப்புச் சக்தியைக் கொண்டிருக்கும் கிராமப்புற விவசாய உற்பத்தி நாட்டின் மொத்த வருவாயில் 21 சதவீதம் மட்டுமேயாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50 சதவீத அளவுள்ள வங்கி, இன்சூரன்ஸ், தொலைபேசி - செல்பேசி, தகவல் தொழில் நுட்பச்சேவை ஆகிய சேவைத்துறையில் 27 சதவீதத்தினரே வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். ஆனால், விவசாயத் துறையில் இருந்து வேலையிழப்பவர்களை ஈர்க்கக் கூடிய ஆலை உற்பத்தியில் 17 சதவீதத்தினரே ஈடுபட்டுள்ளனர்.

இதுமட்டுமல்ல, இந்தியப் பொருளாதார வளர்ச்சி என்பது மக்கள் தொகை அதிகமுள்ள உத்திரபிரதேசம், மத்தியப்பிரதேசம், பீகார், ஜார்க்கண்ட், ஒரிசா போன்ற மாநிலங்களில் அற்ப அளவுகூட கிடையாது. அவை தொடர்ந்து பின்தங்கிய மாநிலங்களாகவே உள்ளன. ஏற்கெனவே அடிப்படைக் கட்டுமான வசதிமிக்க மாநிலங்களில்தான் முதலீடும், உற்பத்தியும், சந்தையும் உருவாகிக் கொண்டே போகின்றன. குஜராத், மராட்டியம், தமிழகம், ஆந்திரம், கர்நாடகா, அரியானா - பஞ்சாப் போன்ற மாநிலங்களின் வளர்ச்சியிலேயே ஆளும் வர்க்கங்களும் பன்னாட்டு முதலாளிகளும் குறியாக உள்ளனர். பீகாரின் சராசரி வருமானம் அரியானா, மராட்டியம் போன்ற மாநிலங்களின் சராசரி வருமானத்தோடு ஒப்பிடும் போது கால்பங்கு கூடக் கிடையாது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் சேவைத்துறையில் வேலைவாய்ப்புகள் பல்கிப் பெருகியுள்ளதாகக் கூறப்படும் அதேவேளையில், வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து வேலைதேடுபவர்களின் எண்ணிக்கை 4 கோடியாக உள்ளது. அரசு உட்பட அமைப்பு ரீதியிலான துறைகளில் வேலையோ கடந்த பதிமூன்று ஆண்டுகளாக 3 கோடி என்ற நிலையிலேயே தேங்கிப் போயிருக்கிறது. உலகிலுள்ள 177 நாடுகளில் மனித வளமேம்பாட்டில் இந்தியா 127-வது இடத்தில் இருக்கிறது. 5 வயதுக்கும் குறைவான இந்தியக் குழந்தைகளில் பாதியளவு போதிய உணவின்றிக் கிடக்கின்றன. இந்தியப் பெண்களில் 46 சதவீதமானவர்கள் படிப்பறிவற்றவர்களாக உள்ளனர். அரசுப் புள்ளிவிவரப்படியே 25 கோடி இந்தியர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர். அரசு சாரா நிறுவனங்களின் புள்ளி விவரப்படி இதுவே 40 கோடியாகும்.

ஆக, எப்படிப் பார்த்தாலும் இந்தியப் பொருளாதாரம் வட்டார ரீதியாக, வர்க்க ரீதியாக, பாலியல் ரீதியாக, நகர்ப்புற-கிராமப்புற வேறுபாடு ரீதியாக ஒரு சார்பாகக் கோணித்துப் போகிறது. அனைத்துத் தரப்புகளின் வளர்ச்சி, முன்னேற்றத்துக்கானதாகப் பொருளாதாரம் திட்டமிடப்படுவதில்லை கருணாநிதியோ - ஜெயலலிதாவோ, வாஜ்பாயோ - மன்மோகன்சிங்கோ அவர்களது அக்கறையெல்லாம் ஒரு சார்பாகவே உள்ளது. இதற்கு ஈடுகட்டும் வகையில்தான் ஏழ்மைக் குறைப்பு, இலவசத் திட்டங்கள் வருகின்றவே தவிர, மக்களின் நலன்களுக்காக அல்ல.

● ஆர்.கே.


படிப்பகம்

www.padippakam.com

# தமிழகத்தில் தாலிபான்கள்

குஜராத்தில் 2002-இல் நடந்த பார்ப்பன பயங்கரவாத வெறியாட்டத்தின் போது, கீதா பென் என்ற இந்துப் பெண் பார்ப்பன பயங்கரவாதிகளால் வெட்டிக் கொல்லப்பட்டு வீதியில் வீசியெறியப்பட்டார். ஒரு முசுலீம் இளைஞனைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டதுதான் அவர் செய்த 'குற்றம்'! இன்றும் அதேபோல் ஒரு காதல் விவகாரம்; அதே வெறியாட்டம். ஆனால், இந்து வெறியர்களின் இடத்தில் முசுலீம் மத வெறியர்கள். கீதாபென்னின் இடத்தில் பர்வீன். கொலைக்குப் பதில் அடித்து உதைத்து மொட்டையடித்து அவமானப்படுத்தல். வெட்கக்கேடு என்னவென்றால், குஜராத்தின் இடத்தில் தமிழ்நாடு!


விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி பழைய மாரியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் ஜஹாங்கீர் ஒரு கூலித் தொழிலாளி. அவரது இரண்டாவது மகள் பர்வீனுக்கும் அதே பகுதியில் டீக்கடையில் வேலை செய்யும் சுந்தரம் என்ற இளைஞருக்கும் காதல் ஏற்பட்டு, வீட்டுக்குத் தெரியாமல் கடந்த ஜூன் 11-ஆம் தேதியன்று கல்ராயன் மலையிலுள்ள வெள்ளிமலை கோயிலில் இருவரும் திருமணம் செய்து கொண்டுள்ளனர். தகவல் கிடைத்ததும் பர்வீனின் பெற்றோர் தமது மகளைக் காணவில்லை என்று கள்ளக்குறிச்சி போலீசு நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனர். இதையறிந்த சுந்தரத்தின் நண்பர்கள், '18 வயது நிரம்பாத பெண்ணை அழைத்துக் கொண்டு சென்றுள்ளதால் போலீசார் உன்னைக் கைது செய்யக் கூடும்; எனவே, உடனே பர்வீனுடன் ஊருக்குத் திரும்பி விடு' என்று தொலைபேசி மூலம் சுந்தரத்துக்குத் தெரிவித்துள்ளார்கள். அதன்படியே சுந்தரமும் பர்வீனை அழைத்துக் கொண்டு கள்ளக்குறிச்சி போலீசு நிலையத்துக்கு 14-ஆம் தேதியன்று வந்துவிட்டார். அங்கு போலீசார் கட்டப் பஞ்சாயத்து செய்து பர்வீனை அவரது பெற்றோருடன் அனுப்பி வைத்தனர்.

போலீசு ஸ்டேஷனிலிருந்து அவர்கள் வீடு திரும்பும் வழியில் பள்ளிவாசல் பராமரிப்புப் பாதுகாப்புச் சங்கத்தைச் சேர்ந்த ஹுமாயூன், சிராஜ், யாசின் உள்ளிட்ட 20 பேர் கொண்ட கும்பல், "ஏண்டா உங்களுக்கு வேற மதத்து மாப்பிள்ளை கேக்குதா?" என்று ஜஹாங்கீரையும் அவரது மனைவியையும் பர்வீனையும் சுற்றிவளைத்து தாக்கி, தெருவெங்கும் நாயைப் போல அடித்து இழுத்து வந்துள்ளது. "ஏண்டி, இந்து மதத்தைச் சேர்ந்தவனையா காதலிக்கிற? பன்னி மேய்க்கிற பயலைத் தவிர வேறு எவனும் உன் கண்ணுக்குத் தெரியலை யாடி?" என்று கேட்டு ஆபாச வசவுகளுடன் பர்வீனைக் காட்டுமிராண்டித்தனமாக அடித்து உதைத்த அக்கும்பல், முடிதிருத்தும் தொழிலாளியான மணிகண்டன் என்பவரை மிரட்டி இழுத்து வந்து, "இந்த முடி இருக்குறதாலதானே இவ புருஷனைத் தேடினா! இதை வெட்டுறா!" என்று ஜஹாங்கீரின் வீட்டு முன்னே பர்வீனுக்கு மொட்டையடித்து அவமானப்படுத்தியுள்ளது.

இக்கொடுஞ்செயலைத் தடுக்க பர்வீனின் பெற்றோர்கள் காலில் விழுந்து கதறிய போதிலும், அவர்களை எட்டி உதைத்துவிட்டு, தமது 'இலட்சியத்தை' நிறைவேற்றியுள்ளது, இந்த மயிர் பிடுங்கி மதவெறிக் கும்பல். இந்த அட்டூழியத்தை ஊரே கூடிநின்று வேடிக்கை பார்த்துள்ளதே தவிர, ஒருவர்கூட இதைத் தட்டிக் கேட்கவில்லை. புகார் கொடுக்க போலீசு நிலையம் சென்ற ஜஹாங்கீரை மிரட்டி விரட்டியுள்ளது போலீசு கும்பல். அதன்பிறகு ஜஹாங்கீரின் வீட்டைச் சுற்றி ஆட்களை நிறுத்தி, இந்த விவகாரம் பற்றி அவர் வேறெங்கும் புகார் செய்ய முடியாதபடி உருட்டி மிரட்டியுள்ளது இம்மதவெறிக் கும்பல்.

பின்னர், இக்கும்பலின் கண்ணில் படாமல் தப்பித்து விழுப்புரம் மாவட்ட போலீசு கண்காணிப்பாளரைச் சந்தித்து ஜஹாங்கீர் புகார் கொடுத்த பிறகுதான், இக்கொடுஞ்செயல் வெளியுலகுக்குத் தெரியவந்துள்ளது. மாவட்ட போலீசின் தலையீட்டால் கள்ளக்குறிச்சி போலீசு முசுலீம் மதவெறிக் கும்பலைச் சேர்ந்த மூவர் மீதும், முடிதிருத்தும் தொழிலாளி மணிகண்டன் மீதும் வழக்குப் பதிவு செய்துள்ளது. மற்றவர்கள் இன்னமும் சுதந்திரமாகத்தான் திரிகிறார்கள்.

முசுலீம் மதவெறியர்களைத் தண்டிக்கக் கோரிப் போராடும் முசுலீம் ஏழைப் பெண் பர்வீன்.



"ஜஹாங்கீர் தனது மகள் வேற்று மதத்தவரைத் திருமணம் செய்ததால் ஆத்திரமடைந்து, என்னை அழைத்து மொட்டை அடிக்கச் சொன்னார்" என்று மத வெறிக் கும்பலின் அச்சுறுத்தலுக்குப் பணிந்து பொய் வாக்குமூலம் கொடுத்துள்ளார், முடிதிருத்தும் தொழிலாளியான மணிகண்டன். '18 வயது நிறைவடையாத பர்வீனைக் கடத்திச் சென்று கற்பழித்து விட்டதாக' சுந்தரத்தின் மீது பொய் வழக்கு போட்டு இந்த விவகாரத்தை திசைதிருப்பவும் மதவெறிக் கும்பல் முயற்சித்து வருகிறது.

இசுலாம் ஒரு மதமல்ல; வாழ்க்கைக்கான மார்க்கம்; இங்குதான் சகோதரத்துவமும் பெண்களுக்குச் சுதந்திரமும் இருக்கிறது என்றெல்லாம் இசுலாமிய அடிப்படைவாதிகள் உபதேசம் செய்கிறார்கள். ஆனால், தமது மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால்

தொடர்ச்சி 17-ஆம் பக்கம்

www.padippakam.com

## இட ஒதுக்கீடு:

# சாதி இந்துக்களுக்கு வக்காலத்து தான் சமூகநீதியா?

## - இனவாதிகளின் அவதூறும் எமது நிலையும்

**மா**ற்று இயக்கத்தினர் மீது இட்டுக் கட்டி அவதூறும் பொய்யும் புனைச் சுருட்டும் பரப்புவதாலேயே மட்டும் எந்தவொரு இயக்கமும் வளர்ந்துவிட முடியுமா? அப்படித்தான் நம்புகிறார்கள் தமிழினவாதிகள். தேசிய இனப் பிரச்சினையாகட்டும், இடஒதுக்கீடாகட்டும், ஈழப் பிரச்சினையாகட்டும், இந்தத் தமிழினவாதிகளின் நிலைப்பாடுகளை ''அப்படியே'' ஏற்காதவர்களை எதிரிகளோடு இணைவைத்து முத்திரை குத்தி அவதூறு செய்கிறார்கள். குறிப்பாக, புதிய ஜனநாயகப் புரட்சிகர இயக்கத்தினரிடம் மட்டும் இந்தச் சிறப்பு அணுகுமுறையை வைத்திருக்கிறார்கள்.

அதேசமயம், தமிழ்தேசிய இனத்தின், சமூக நீதியின், ஈழவிடுதலையின் எதிரிகளான பா.ஜ.க.-ஆர்.எஸ்.எஸ். மற்றும் ஜெயலலிதா கும்பல்களின் நெருங்கிய பங்காளிகளான - ஜார்ஜ் பெர்னாண்டஸ், வைகோ, திருமா போன்றவர்களோ தமிழினவாதிகளின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய தலைவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் புதிய ஜனநாயகப் புரட்சி அமைப்புகளைப் பார்த்து ''தமிழ் தேசியத்துக்கு எதிரான அகில இந்திய பூணூலிஸ்டுகள்'', ''ஈழப் பிரச்சினையில் புதிய ஜனநாயகத்தின் நிலைப்பாடுகளும் பார்ப்பன 'துக்ளக் சோ'வினுடையவையும் ஒன்றுதாம்'', ''இடஒதுக்கீடு பிரச்சினையில் ம.க.இ.க.வின் அணுகுமுறை மறைமுகப் பார்ப்பனியமாக உள்ளது'' - இப்படியெல்லாம் தொடர்ந்து இட்டுகட்டி, முத்திரை குத்தி அவதூறு செய்கிறார்கள், தமிழினவாதிகள்.

இந்தப் பிரச்சினைகளிலெல்லாம் நமது நிலைப்பாடுகளை, அடிப்படை ஆதாரங்களை விளக்குவதோடு நாம் நிற்கவில்லை. இவற்றில் தமிழினவாதிகளின் நிலைப்பாடுகள் மீது பல முக்கியமான கேள்விகளை எழுப்பி, நிராகரித்திருக்கிறோம். அவை எதற்குமே பதிலளிக்கத் திராணியற்ற தமிழினவாதிகள், நமது எதிரிகளின் நிலைப்பாடுகளோடு ஒப்பிட்டு இணை வைப்பதோடு, அவதூறும் பொய்பிரச்சாரமும் செய்கிறார்கள். அவர்கள் இணை வைத்துக் காட்டும் எதிரிகளுடையவற்றில் இருந்து நம்முடைய நிலைப்பாடுகள் எவ்வாறு அடிப்புடையிலேயே மாறுபடுகின்றன என்றும் பலமுறை விளக்கியிருக்கிறோம். எளிதில் யாரும் புரிந்து கொள்ளக்கூடிய இந்த விளக்கங்களுக்கே கூட மறுப்புரை ஏதும் முன்வைக்காமல், கோயாபல்சுகளாகி திரும்பத் திரும்ப அதே பொய்களைப் பேசி வருகிறார்கள்.

தற்போது, உயர்கல்வியில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு திட்டத்தை அமல்படுத்தப் போவதாக மத்தியில் ஆளும் காங்கிரசு தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அறிவித்திருக்கிறது. இதை ஏற்கெனவே உயர்கல்வி பெற்று வேலையிலிருக்கும் மற்றும் உயர்கல்வி கற்றுவரும் முற்பட்ட சாதியினர் எதிர்த்துப் போராடி வருகின்றனர். இதையொட்டி, ''உயர்கல்வியில் இட ஒதுக்கீட்டிற்கு எதிரான பார்ப்பன மற்றும் பிற ஆதிக்க சாதிகளின் போராட்டத்தை முறியடிப்போம்'' என்று ம.க.இ.க. மற்றும் பிற புதிய ஜனநாயகப் புரட்சி அமைப்புகள் முழக்கம் முன்வைத்துப் போராடி வருகின்றன.

''உயர்கல்வியில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு'' என்பதை பார்ப்பனர்கள் தவிர வேறு பிற ஆதிக்க சாதிகளும் எதிர்ப்பதையும் முறியடிக்க வேண்டியுள்ளது. அதோடு ஒருபுறம் இடஒதுக்கீட்டை ஆதரித்துக் கொண்டும் அதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் ராமதாசு, முலயம் சிங், லல்லு பிரசாத், கருணாநிதி போன்ற பிற்படுத்தப்பட்டவர்களின் பிரதிநிதிகளாகக் காட்டிக் கொள்ளும் சக்திகள் அதிகாரத்தில் பங்கு பெற்று, தனியார்மயம், தாராளமயம் மற்றும் உலகமயம் என்ற மறுகாலனியாதிக்கத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் முற்படுத்தப்பட்ட சாதிகளுடன் சமரசம் செய்து கொண்டுள்ளனர். அதுமட்டுமல்ல, பொதுவில் எல்லா இட ஒதுக்கீட்டிலும் உள்ளதைப் போலவே, உயர் கல்விக்கான இட ஒதுக்கீட்டிலும் இடம் பெற எத்தணிக்கும் சாதிகள் எல்லாம் உண்மையில் அதற்குத் தகுதியானவை என்று கருத முடியாது.

ஷூக்களுக்கு பாலிஷ் போட்டு, இட ஒதுக்கீட்டிற்கு தங்களின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் போபால் நகரைச் சேர்ந்த இளநிலை மருத்துவர்கள்: இட ஒதுக்கீடு எதிர்ப்பு என்ற போர்வையில் உழைக்கும் மக்களைக் கேவலப்படுத்தும் பார்ப்பன-மேல்சாதி திமிர்.



அதாவது, பிற்படுத்தப்பட்ட சாதிகள் என்ற பட்டியலில் தற்போது இடம் பெற்றுள்ள சாதிகளில் பலவும் முற்பட்ட சாதிகளாக உள்ளன. கல்வி ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பிற சாதிகளை ஒடுக்கும் பல ஆதிக்க சாதிகள் பொய்யான அடிப்படையில் தாமும் பிற்படுத்தப்பட்டவை என்று உரிமை பாராட்டி இட ஒதுக்கீடு வாய்ப்பைக் கேடாகப் பயன்படுத்திக் கொள்கின்றன.

இந்த உண்மை விவரங்களைப் பரிசீலிக்காமலேயே, மறுத்துரைக்காம


படிப்பகம்

www.padippakam.com

லேயே, தங்கள் நிலையை ஆதரிக்க வேண்டும்; இல்லையென்றால் நாம் இட ஒதுக்கீட்டிற்கு எதிரானவர்கள், பார்ப்பனர்களுக்கு மறைமுக ஆதரவு தெரிவிப்பவர்கள் என்றும் முத்திரை குத்துகிறார்கள், தமிழினவாதிகள். அவர்களுடைய நிலையோ எந்த ஆய்வு-பரிசீலனையும் இல்லாது, நீதிக் கட்சியின் சிற்றரசர்கள், மிட்டாமிராசுகள், ஜமீன்தாரர்கள், (அக்கட்சி அப்படிப்பட்டதுதான் என்பதற்கு ஆதாரம் 1945 சேலம் திராவிடர் கழக மாநாட்டில் அண்ணாதுரை ஆற்றிய உரையேயாகும்) ஆகிய சாதி இந்துக்களின் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதோர் என்ற பொதுவரையறையின் அடிப்படையிலான நிலையைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுவதாகும்.

•••

**"கோ**ழி முதலில் வந்ததா, முட்டை முதலில் வந்ததா" என்று புத்திசாலித்தனமாக சிலர் கேட்பதுண்டு. இரண்டில் ஒன்று சொல்லமுடியாது, பரிணாம வளர்ச்சிப்படி தான் வந்தது என்று சொல்லப் புகுந்தால், பதிலைப் புரிந்து கொள்ள மறுத்து, "அதெல்லாம் வேண்டாம் இரண்டில் ஒன்று சொல்லுங்கள்" என்று முட்டாள்தனமாக அவர்கள் அடம்பிடிப்பதும் உண்டு. அப்படித்தான் அடம் பிடிக்கிறார்கள், தமிழினவாதிகள். தமது மூதாதையர்களின் - சாதி இந்துக்களின் - இடஒதுக்கீட்டுக் கொள்கையை அப்படியே ஆதரிக்க வேண்டும். அதை எவ்விதப் பரிசீலனைக்கும் மாற்றத்துக்கும் உட்படுத்தக்கூடாது. இல்லையென்றால் எதிர்க்கிறீர்கள் என்றுதான் பொருள் என்கிறார்கள். மொத்தத்தில் "இட ஒதுக்கீட்டை ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா? இரண்டில் ஒன்று சொல்லுங்கள். இரண்டில் ஒன்றுதான் இருக்க முடியும். மூன்றாவது ஒன்று இருக்க முடியாது. இரண்டும் இல்லாத வேறொன்று இருக்க முடியாது, நடுநிலையும் இருக்க முடியாது" என்றெல்லாம் குதர்க்கம் பேசுகிறார்கள். பகுத்தறிவுக்கும் தர்க்கவியலுக்கும் விரோதமான இந்த அணுகுமுறையை அறிவியல்பூர்வமானது என்றும் கற்பித்துக் கொள்கிறார்கள்.

கேள்வியை அமைக்கும் முறை, மாற்றுக் கருத்துக்களைக் காமாலைக் கண் கொண்டு பார்க்கும் பார்வை, மாற்றாரும் எண்ணிப் பார்க்காத வகையில் அவர்களுடைய நிலைக்கு இவர்களே தரும் வியாக்கியானம் எல்லாவற்றிலும் பாசிசத்தனமான கருத்துத் திணிப்புத்தான் இருக்கிறது. காசுமீர் பிரச்சினையில் இந்தியாவின் நிலையை ஆதரிக்கிறீர்களா, இல்லையா என்ற கேள்விக்கு இல்லை எதிர்க்கிறோம் என்று பதில் சொன்னால், அப்படியென்றால் பாகிஸ்தான் நிலையை ஆதரிக்கிறார்கள் என்று முடிவு செய்தால் அது என்ன தர்க்கமாகும் தெரிகிறதா? அதேபோல இந்தியாவின் நிலையையும் ஏற்கவில்லை, பாகிஸ்தானின் நிலையையும் ஏற்கவில்லை; இரண்டையும் எதிர்க்கிறோம் என்று சொன்னால் அது நடுநிலையும் ஆகிவிடாது. காசுமீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்பதுதான் சரியானது என்ற மூன்றாவது, மாற்று வேறொரு நிலையை எடுக்கவும் முடியும். இப்படி நிலை எடுப்பதாலேயே இந்திய வெறியர்கள் நம்மைப் பார்த்து, தேசத்துரோகிகள், பாக் ஆதரவாளர்கள் என்று அவதூறும் செய்யக் கூடும்.



சமூக நீதிக் காவலர்களுள் ஒருவரான நிதிஷ்குமாரின் ஆட்சி நடக்கும் பீகாரில், இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவாகப் போராடிய மருத்துவக் கல்வி மாணவர்களைக் கொடூரமாகத் தாக்கும் போலீசு.

அதைப்போலத்தான், இந்தத் தமிழினவாதிகள் உட்பட சமூக (அ) நீதிக்காரர்கள்; நன்றாகக் கவனியுங்கள், இட ஒதுக்கீடு பிரச்சினையில் நமது நிலை என்னவென்று கேட்கவில்லை. தமது நிலையை ஆதரிக்கிறீர்களா? இல்லையா? என்று கேட்கிறார்கள். நாம் நமது நிலையைச் சொன்னால் அவர்களாகவே ஒரு வியாக்கியானம் செய்து கொள்கிறார்கள்.

இட ஒதுக்கீடு பிரச்சினையில் நமது நிலை குறித்து ஏற்கெனவே பின்வருமாறு எழுதியுள்ளோம்.

*இட ஒதுக்கீடு குறித்துப் பார்ப்பன மற்றும் பிற உயர்சாதி இந்துக்கள் மூன்று விதமான நிலைப்பாடு எடுக்கின்றனர். ஒன்று; இட ஒதுக்கீடு என்பதே கூடாது; தகுதி, திறமை அடிப்படையிலேயே கல்வி, வேலை வாய்ப்புகள் தரவேண்டும் என்பது. இரண்டு; பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு செய்து தரவேண்டும்; ஏனெனில் கல்வி மற்றும் சமூக உரிமை இப்போது கிடையாது என்பது. மூன்று: கல்வி மற்றும் சமூக ரீதியிலானவற்றோடு பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ளதையும் அடிப்படையாக வைத்து இடஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பது. இடஒதுக்கீடு - மண்டல் அறிக்கையின் தீவிர ஆதரவாளர்களாகக் காட்டிக் கொள்ளும் சில "மார்க்சிய - லெனினியக் குழுக்கள்" கூட இந்த மூன்றாவது நிலைப்பாட்டைத்தான் எடுத்துள்ளன. ஆனால் "புதிய ஜனநாயகம்" மேற்படி மூன்று நிலைப்பாடுகளையும் ஏற்கவில்லை; எதிர்த்து அம்பலப்படுத்தி வருகிறது.*

*"சமூக ரீதியிலும், கல்வி ரீதியிலும் பின் தங்கியவர்களுக்கு இடஒதுக்கீடு என்பதுதான் அரசியல் சட்டத்தில்*

www.padippakam.com

*உள்ளது; இது தான் சரியானது; இவ் விரு அடிப்படைகளில் எது ஒன்றையும் புறக்கணிக்கக் கூடாது'' என்பதுதான் திராவிடக் கட்சிகள், அவற்றின் சார்பு டையவர்களது நிலைப்பாடு இதை ''புதிய ஜனநாயகம்'' எதிர்க்கவில்லை. கல்வி மற்றும் சமூக ரீதியில் ஒடுக்கப் பட்டவர்கள் - உரிமை மறுக்கப்பட்ட வர்கள்தான் இட ஒதுக்கீடு கோரும் உரிமை உடையவர்கள் என்றே கூறிவந் திருக்கிறோம். இந்த விவகாரத்தில் திரா விடக் கட்சிகள் அவற்றின் சார்புடைய வர்களுக்கும் ''புதிய ஜனநாயக''த்திற் கும் இடையிலான வேறுபாடு எந்தெந்த சாதிகள் சமூக ரீதியிலும் கல்வி ரீதியி லும் ஒடுக்கப்பட்டவைகள் - உரிமை மறுக்கப்பட்டவைகள், இதை எப்படித் தீர்மானிப்பது என்பதுதான்! அப்படி இருக்கும்போது பார்ப்பனர்களைப் போலவே குழப்புவதாகவும், 'புதிய ஜனநாயகம் என்பது புதிய பார்ப்பனீ யமே' என்று எழுதுவதும் வெறும் அவ தூறும் பொய்யும்தான்! (புதிய ஜனநா யகம், 1-15, மார்ச்'92, கேள்வி-பதில்)*

ஆகவே, இட ஒதுக்கீடு பிரச்சினை யில் நமது முழுமையான, சுருக்கமான நிலை இதுதான்:

✳ நிலவும் சமுதாயப் பொருளா தார, அரசியல் அமைப்பின் மீது வெறுப் புறும் பல்வேறு பிரிவு மக்களும் தங்க ளுக்கு எதிரான கலகத்தில் இறங்கி விடக் கூடாது என்பதற்காகவே, ''இந்த ஆட்சியில் தாங்களும் பங்கு பெறுகி றோம்'' என்கிற மாயையை உருவாக்கு வதற்காகவே, கொண்டு வரப்பட்டது தான் இட ஒதுக்கீடு என்ற ''நிறுவனமய மாக்கும் கொள்கை.'' இந்த அடிப்படை யில்தான் உலகின் பல நாடுகளிலும் ஆளும் வர்க்கங்களே இடஒதுக்கீடு ஏற் பாட்டைச் செய்கின்றனர். ஆங்கிலேயக் காலனியவாதிகள் முதல் ஆளும் காங் கிரசு - ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுவரை இப்படித்தான், இதற்காகத் தான் செய்கின்றனர். தமிழினவாதிகள் உட்பட சமூக அநீதிக்காரர்கள் கருதுவ தைப் போல நீதிக்கட்சியினரோ, திராவி டர் கழகத்தினரோ முன்வைத்துப் போராடிப் பெற்ற உரிமையல்ல. ஆட்சி யாளர்களால் புகுத்தப்பட்ட நிறுவனம யமாக்கும் இடஒதுக்கீட்டுக் கொள் கையை சாதி இந்துக்களுக்குச் சாதகமா கத் திருப்பிக் கொண்டதுதான் நீதிக் கட் சிக்காரர்களின் ''வகுப்புரிமைப் போர்.'' தங்களது ஏகபோகஆதிக்கம் ''பறிபோகிறதே'' என்று ஆத்திரமுற்று இடஒதுக்கீட்டுக் கொள்கையை பார்ப்ப னர்கள் எதிர்த்தபோது, அதை முறியடிக் கத் திராவிடர் கழகத்தினர் நடத்தியது தான் பார்ப்பனிய எதிர்ப்புப் போராட் டம். இடஒதுக்கீடு தவிர வேறு பிறவற் றில், பெரியார் நடத்திய பார்ப்பனிய எதிர்ப்புக்களை அவரது ''வாரிசுகள்'' கைவிட்டுவிட்டார்கள்; ''இடஒதுக்கீடு தான் பெரியாரியத்தின் உயிராதாரமா னது'' என்கிறார்கள். ஆனால், ஆட்சி யாளர்களின் நிறுவனமயமாக்கும் கொள்கை என்கிற முறையில் இடஒதுக் கீட்டில் உள்ள புரட்சிக்கு பாதகமான அம்சங்களை மார்க்சிய - லெனினிய வாதிகள் பார்க்கிறார்கள். தங்களையும் பொதுவுடைமைவாதிகள் என்று கூறிக் கொள்ளும் தமிழினவாதிகள் இந்த உண்மையைக் காண மறுக்கிறார்கள். இந்த உண்மையை வலியுறுத்தும் நமது நிலையை எடுத்துக் காட்டி, ''இடஒதுக் கீட்டிற்கு எதிரானவர்கள்'', ''மறைமுகப் பார்ப்பனியம்'' என்று அவதூறு செய்கி றார்கள்.




**இட ஒதுக்கீட்டை எதிர்க்கும் பார்ப்பன - மேல்சாதி வெறியை அம்பலப்படுத்தி புரட்சிகர அமைப்புகள் மதுரையில் நடத்திய ஆர்ப்பாட்டம்.**

✳ அதேசமயம், இடஒதுக்கீடு என் பது ஆட்சியாளர்களே புகுத்துவது என் றபோதும், நிலவும் சமூக அமைப்பில் ஒரு சலனத்தை ஏற்படுத்தும் சீர்திருத்த மாகவும் இருக்கிறது. கம்யூனிஸ்டுகள் சீர்திருத்தங்களுக்கு எதிரானவர்கள் அல்ல என்கிற முறையில் நாம் இந்த இடஒதுக்கீட்டிற்கு எதிரானவர்கள் அல்ல; அது ஒரு தற்காலிக ஏற்பாடு என் கிற முறையில் எதிர்மறையில் ஏற்கி றோம். ஆனால், இடஒதுக்கீடு ஒரு முழுமையான தீர்வல்ல, ஒரு இடைக் காலத் தீர்வுதான், அதுவே சமூகப் புரட் சியாகாது என்பதைத் தாங்களும் ஏற்ப தாகக் கூறிக் கொள்ளும் தமிழினவாதி கள் உட்பட சமூக(அ)நீதிக்காரர்கள் முரண்பாடாகவும் வாதிடுகிறார்கள். இட ஒதுக்கீடு என்பது பார்ப்பனியத் துக்கு எதிரான வகுப்புரிமைப் போர் என்றும் உலகிலேயே தனிச்சிறப்பான இந்திய சாதிய சமுதாயப் பிரச்சினைக ளுக்கு வேறு யாராலும் எந்தத் தீர்வும் முன்வைக்கப்படாதபோது பெரியாரும் அம்பேத்கரும் கண்டுபிடித்த சரியான ஒரே தீர்வு இதுதான் என்றும் உயர்த்திப் பிடிக்கப்படுவது இட ஒதுக்கீடுதான்! ஆட்சியாளர்களாலேயே புகுத்தப்பட் டது, சமூகப்புரட்சியாகி விடாது, சமூக சீர்திருத்தம்தான் என்கிறபோது இந்த இடஒதுக்கீடுதான் பெரியாரியத்தின் உயிராதாரமானது என்று வாதிடுவது பெரியாரையே இழிவுபடுத்துவதா காதா?

கருணாநிதி 5-வது முறையாக முதல்வராகப் பதவியேற்ற ஒரு மாதத் திற்குள்ளாகவே அவரை உலகவங்கி அதிகாரி மைக்கேல் கார்டர் சந்தித்து தமிழகத்தில் உள்ள கிராமப்புற ஏழை கள் மற்றும் அபாயகரமான பிரிவு மக்க ளின் ஏழ்மைக் குறைப்புக்காக 750 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கினார். தேர்தலின்போது கருணாநிதி அறிவித்த பல்வேறு இலவசத் திட்டங்களுக்கும் இந்த நிதி பயன்படப் போகிறது. ஜெய லலிதா ஆட்சிக் காலத்திலேயே ஒப்புத லளிக்கப்பட்டது, உலக வங்கியின் இந்த ஏழ்மைக் குறைப்புத் திட்டம். தனி யார்மயம் - தாராளமயம் - உலகமய மாக்கம் ஆகிய மறுகாலனியாதிக்கம் தான் மக்களை ஏழ்மையில் தள்ளுகிறது என்றபோதும் பல்வேறு ''இலவசங் கள்'' அடங்கிய இந்த ஏழ்மைக் குறைப் புத் திட்டத்தை நாம் எதிர்ப்பதில்லை. அதேசமயம், இதை ஆதரித்து, இந்த ஏழ்மைக் குறைப்புத் திட்டத்தின் கீழ் மேலும் மேலும் பல ''இலவசங்கள்'' கோரிப் போராடவும் போவதில்லை.


படிப்பகம்

www.padippakam.com

வறுமையிலும் பட்டினியிலும் செத்து மடியும் நம் மக்கள் உயிர் பிழைத்திருப்பதற்கு ஒரு இடைக்கால ஏற்பாடு என்கிற எதிர்மறைநோக்கில் ஏற்கிறோம்.

ஏழ்மைக் குறைப்புத் திட்டங்களால் வறுமை ஒழிப்போ, மக்களின் பொருளாதா வாழ்வில் புரட்சிகர மாற்றங்களோ வந்துவிடப் போவதில்லை. மறுகாலனியாக்கத்தை முறியடிப்பதே வறுமை ஒழிப்புக்கான வழி என்பதை வலியுறுத்தி மக்களைத் திரட்டுகிறோம். மறுகாலனியாக்கத்தை எதிர்க்கிறீர்கள், ஆகவே அதன் ஒரு பகுதியாகிய ஏழ்மைக் குறைப்புக்கும் எதிரானவர்கள் என்று அதிமேதாவித்தனமாக வாதிட முடியாது. அதைப்போலத்தான், ஆட்சியாளர்களின் நிறுவனமயமாக்கும் கொள்கை என்கிற முறையில் தெரிவிக்கும் இடஒதுக்கீட்டிற்கு எதிரானவாதங்களை, ஒரு சீர்திருத்தம் என்கிற முறையில் தெரிவிக்கும் எதிர்மறையான ஆதரவை மறுப்பதற்குப் பயன்படுத்துவது அயோக்கியத்தனமானது.

✳ இடஒதுக்கீடு கொள்கையை ஒரு சீர்திருத்தம் என்கிற முறையில் ஏற்கும் அதேசமயம், தொழிற்சங்கக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களைப் போலவே இதற்கும் ஒரு வரம்பிருக்கிறது. தொழிற்சங்கக் கோரிக்கைகளுக்கான போராட்டமாகட்டும், இட ஒதுக்கீட்டுச் சீர்திருத்தமாகட்டும், இரண்டையும் தொடர்ந்து வரம்பின்றி செயல்படுத்திக் கொண்டே இருந்தால் எதிர்விளைவுகள் - அதாவது முந்தையதில் முதலாளித்துவக் கண்ணோட்டமும், பிந்தையதில் சாதியக் கண்ணோட்டமும்தான் வலுப்படுத்தப்படும் என்கிறோம். இட ஒதுக்கீட்டால் ஆதாயம் அடைந்த சிலர் கருப்புப் பார்ப்பனர்களாக நடந்து கொள்வதையும் பார்க்கிறோம். இட ஒதுக்கீடு கொள்கை ஒரு சீர்திருத்தம்தான் என்றபோதும், அதைக் கூட சகித்துக் கொள்ளாது பார்ப்பன மற்றும் பிற ஆதிக்க சாதிகள் காட்டும் எதிர்ப்பு கடுமையாகப் போராடி முறியடிக்க வேண்டியது என்கிறோம். அதே சமயம், முன்பு விளக்கியதைப் போன்று இடஒதுக்கீட்டின் பலன்களை அதற்குத் தகுதியற்ற ஆதிக்க சாதிகள் (சமூக ரீதியில் தொடர்ந்து ஒடுக்குமுறை செலுத்தி வரும் சாதிகள்) பெறுவதையும் எதிர்க்க வேண்டும். ஆனால், இத்தகைய ''சாதி இந்துக்களின்'' நலன்களுக்காகத்தான் தமிழினவாதிகள் உட்பட சமூக அநீதிக்காரர்கள் புதிய ஜனநாயகப் புரட்சியாளர்கள் மீது பாய்கின்றனர், அவதூறு செய்கின்றனர்.

— ஆசிரியர்குழு

## இந்து மதவெறியின் பரிணாமம்:

# அன்று சோமபானம்! இன்று கோகெய்ன்!

**போ**தை மருந்தை வாங்கி உட்கொண்ட குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்ட ராகுல் மகாஜனின் கதையை, முதலாளித்துவ ஊடகங்கள் அனைத்தும் ''செண்டிமெண்ட்'' கலந்து கொடுத்தன. அந்த 31 வயது இளைஞனின் தந்தை பிரமோத் மகாஜன், தனது சொந்த தம்பியாலேயே சுடப்பட்டு இறந்து போன சோகம் மறைவதற்குள்ளாகவே, மகாஜன் குடும்பத்தைத் தாக்கிய இரண்டாவது பேரிடியாக, இந்த விவகாரத்தை முதலாளித்துவ பத்திரிகைகளும், ஓட்டுச்சீட்டு அரசியல் வாதிகளும் சித்தரித்து வருகின்றனர்.

ராகுல் மகாஜனின் குடும்பம் வருத்தம் அடைந்திருக்கும். ஆனால், எதற்காக? ராகுல் மகாஜன் போதை மருந்து உட்கொள்ளும் பழக்கமுடையவர் என்பது மகாஜன் குடும்பத்திற்கு மட்டுமல்ல, வாஜ்பாய் உள்ளிட்டு, பிரமோத் மகாஜனோடு நெருக்கமாக இருந்த பா.ஜ.க. தலைவர்கள் அனைவருக்கும் தெரியும். இந்த உல்லாச விவகாரம் அம்பலப்பட்டு கைது வரை போய், ராகுல் மகாஜனின் எதிர்கால அரசியல் வாழ்வு பின்னடைவுக்கு உள்ளாகிவிட்டதே என்பதுதான் மகாஜன் குடும்பத்தின் வருத்தமாக இருக்கும். ஏனென்றால், பிரமோத் மகாஜன் இறந்து போனதையடுத்து அவரது வாரிசான ராகுல் மகாஜனை பா.ஜ.க.வில் ஏதாவதொரு பதவியில் திணித்து விடுவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வந்தன. பா.ஜ.க - ஆர்.எஸ்.எஸ்.இன் உயர்மட்டத் தலைவர்களும இதற்குச் சம்மதித்திருந்தனர்.

''ராம பக்தர்களின் கட்சியாக அறியப்பட்ட பா.ஜ.க., இப்பொழுது அனைத்துத் தரப்பினரின் கட்சியாக மாறிவிட்டதற்கு இந்த நள்ளிரவு போதையாட்டமே சாட்சி''; ''இந்தியா ஒளிர்கிறது என்ற முழக்கத்திற்குப் பதிலாக, இந்தியா உறிஞ்சுகிறது என்ற முழக்கத்தை இனி பா.ஜ.க. முன் வைக்கலாம்'' - என சொந்தக் கட்சிக்காரர்களாலேயே கிண்டல் செய்யப்படும் அளவிற்கு, இந்த விவகாரம் பா.ஜ.க.விற்குப் பாதகமாக உள்ளது.

அதனால்தான், இந்தப் போதை மருந்து விவகாரத்தை முளையிலேயே மூடி மறைத்துவிடவும்; திசை திருப்பிவிடவும் பா.ஜ.க. தலைவர்கள் தீவிரமாக முயன்றனர்.

ராகுல் மகாஜனும், விவேக் மொய்த்ராவும் தில்லியில் ஜூன் 1 அன்று இரவு தங்கியிருந்த அரசாங்க வீட்டுக்கு அருகிலேயே மைய அரசுக்குச் சொந்தமான அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழக மருத்துவமனை இருந்தும், அவர்களை அங்கு கொண்டு சேர்க்காமல், தொலைவில் உள்ள தனியார் - அப்பல்லோ மருத்துவமனைக்கு தூக்கிப் போனதற்குக் காரணமே, இந்த விவகாரத்தை அதன் சுவடே தெரியாமல் மூடி மறைத்துவிட வேண்டும் என்பதுதான். பிரமோத் மகாஜனிடம் முன்பு செயலாளராக வேலை பார்த்த ஹரீஷ் சர்மாதான் இந்த யோசனையைக் கூறியதோடு, அந்த வீட்டில் போதை மருந்து உட்கொண்டதற்கான எல்லா ஆதாரங்களையும் அழித்துவிடும்படி வேலைக்காரர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். அப்பல்லோ மருத்துவமனையின் நிறுவனர் பிரதாப் சி.ரெட்டி, அவரது உதவியாளர், மற்றும் ஹரீஷ் சர்மா - இம்மூவருக்கும் இடையே அந்த நள்ளிரவு நேரத்திலும் இது குறித்து செல்ஃபோன் உரையாடல் நடந்ததாக போலீசார் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

எதிர்பாராதவிதமாக விவேக் மொய்த்ரா இறந்து போனதால், இந்தப் போதை விவகாரம் அம்பலத்திற்கு வந்துவிட்டது. ஆனாலும், அப்பல்லோ நிர்வாகம், அவர்கள் இருவருக்கும் விஷம் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்ற வதந்தியைக் கிளப்பிவிட்டது. பா.ஜ.க.வின் மூத்த தலைவரும், ராகுல் மகாஜனின் மாமாவுமான கோபிநாத் முண்டே, இந்த வதந்தியைப் பத்திரிகையாளர்களிடம் ஊதிப் பெருக்கினார்.

''நாங்கள் 14 விதமான ரத்தப் பரிசோதனைகளைச் செய்துவிட்டோம்; ராகுல் மகாஜன் போதை மருந்து உட்கொண்டதற்கான அறிகுறி எதுவும்

www.padippakam.com

இல்லை'' என்ற புளுகு மூட்டையை அப்பல்லோ நிர்வாகம் அசராமல் அவிழ்த்துவிட்டது. ஆனால், வேறொரு ஆய்வுக் கூடத்தில் ராகுல் மகாஜன் போதை மருந்து உட்கொண்டது நிருபணமான பிறகு, ''நாங்கள் செய்தது வேறு விதமான ஆய்வு; அவர்கள் செய்தது வேறுவிதமான ஆய்வு'' எனப் பூசி மெழுகியது.

''ராகுல் மகாஜன் அப்பல்லோவிற்குக் கொண்டு வரப்பட்டவுடனேயே, அவரது சிறுநீரை எடுத்துப் பரிசோதிக்காமல், திட்டமிட்டே கால தாமதம் செய்துள்ளனர். . பரிசோதனைக்கு முன்பாகவே, நரம்பு மூலம் திரவ மருந்துகளை அவரது உடம்புக்குள் செலுத்தி, சிறுநீரை வெளியேற்றியதன் மூலம், ராகுல் மகாஜன் போதை மருந்து உட்கொண்டதற்கான ஆதாரங்களை அழிக்க முயன்றுள்ளனர். ராகுல் மகாஜனை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்க வேண்டிய அவசியமே இல்லாதபொழுது, அவரை இரண்டு நாட்கள் அந்தப் பிரிவில் தொடர்ந்து வைத்திருந்து, போலீசு விசாரணையைத் தாமதப்படுத்தியுள்ளனர்'' என அப்பல்லோ நிர்வாகம் மீது போலீசார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



போதை மருந்து உட்கொண்ட வழக்கில் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படும் ராகுல் மகாஜன்.

சில பா.ஜ.க. தலைவர்கள் தங்கள் பங்கிற்கு, ''இதற்குப் பின்னால் திட்டமிட்ட சதி இருப்பதாகவும்; ராகுல் மகாஜனைக் கொலை செய்யும் நோக்கத்தோடு யாரோ, எதையோ கலந்து கொடுத்துவிட்டதாகவும்'' பத்திரிகைகளுக்கு பேட்டியளித்து, பிரச்சினையைத் திசை திருப்ப முயன்றனர்.

ராகுல் மகாஜனுக்கு விஷம் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்ற பொய்யைப் பத்திரிகையாளர்களிடம் கூசாமல் சொல்லி, வழக்கைத் திசை திருப்ப முயன்ற ராகுல் மகாஜனின் மாமா கோபிநாத் முண்டே.



இறுதியாக, ராகுல் மகாஜன் போதை மருந்து உட்கொண்டது மருத்துவ ஆய்வு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டவுடன், எல்லாவற்றுக்கும் காரணம் மொய்த்ரா தான் - பிரமோத் மகாஜனிடம் அந்தரங்கச் செயலாளராக இருந்த விவேக் மொய்த்ராதான் சாஹில் ஜாரூவைத் தொலைபேசி மூலம் அழைத்தார்; மொய்த்ராதான் சரக்கு வாங்கிவரச் சொல்லி ஜாரூவிடம் பணம் கொடுத்தார். போலீசு கைப்பற்றியிருக்கும் வெள்ளை பவுடர் கூட மொய்த்ராவிடமிருந்து தான் எடுக்கப்பட்டதுதான் எனப் பழி அனைத்தையும் செத்துப் போனவன் மீது போட்டுவிட்டு, ராகுலை, வாயில் விரலை வைத்தால் கூடக் கடிக்கத் தெரியாத குழந்தை போலக் காட்டுகிறார்கள்.

இந்த வழக்கை விசாரிக்கும் நீதிமன்றம் கூட, சட்டத்திலுள்ள சில தொழில்நுட்பக் காரணிகளை - ராகுல் மகாஜனின் சிறுநீர் பரிசோதனையில் போதை மருந்தின் அளவு குறைவாக இருப்பது; அவரிடமிருந்து போதை மருந்து எதனையும் கைப்பற்ற முடியாமல் போனது; முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதில் போலீசார் செய்துள்ள குளறுபடிகள் - வைத்துக் கொண்டு, ராகுல் மகாஜனை எதிர்பாராத விதத்தில் சிக்கிக் கொண்ட பலிகடாவைப் போலச் சித்தரித்து, ஒன்பதே நாட்களில் பிணையில் விடுதலை செய்துவிட்டது.

ஆனால், ராகுல் மகாஜனின் கடந்த கால வாழ்க்கையைப் பார்த்தால், அவர் கோயில் காளையைப் போலத்தான் ஊர் மேய்ந்து கொண்டிருந்தார். வசதி, பணம், செல்வாக்கு இருந்த அளவிற்கு, அவருக்குப் படிப்பு ஏறியதாகத் தெரியவில்லை. விமான ஓட்டுநர் பயிற்சி பெறுவதற்காக அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டார்; அதிலும் அவர் தேறவில்லை. எனினும், பிரமோத் மகாஜன், தனது மகனுக்கு, தனது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, ''ஜெட் ஏர்வேஸ்'' நிறுவனத்தில் விமானி வேலை வாங்கிக் கொடுத்தார். அந்த வேலையிலும் அவர் நிலைக்கவில்லை. கணினி மென்பொருள் நிறுவனம் நடத்துவதாக பேர் பண்ணிக் கொண்டிருந்த ராகுல் மகாஜன், தனது தந்தை இறந்து போனவுடன், வாரிசு உரிமையைப் பயன்படுத்தி அரசியலில் குதிக்கத் தயாரானார்.

போதை மருந்து உட்கொள்ளும் பழக்கத்தில் இருந்து விடுபட, அவர் ஏற்கெனவே ஒருமுறை இலண்டனில் சிகிச்சை எடுத்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. மும்பய் நகரில், பெரிய மனிதர்கள் நடத்தும் இரவு விருந்துகளில் கலந்து கொள்ளும் பழக்கமுடைய ராகுல் மகாஜன், பா.ஜ.க.வின் ''இந்துப் பண்பாட்டில்'' மூழ்கிப் போனதில்லை. சம்பவம் நடந்த அன்று, போதை மருந்தை மூக்கு வழியாக உறிஞ்சியவுடனேயே, சரக்கில் கலப்படம் இருப்பதாகச்


படிப்பகம்



ராகுல் மகாஜனைக் காப்பாற்ற, அவரை தற்பொழுது விசாரிக்க இயலாது என அப்பல்லோ மருத்துவமனையின் சார்பாகத் தரப்பட்ட கடிதத்தை பத்திரிகையாளர்களிடம் காட்டுகிறார் கூடுதல் உதவி கமிஷனர் மனிஷ் அகர்வால்.

சொன்னவரே ராகுல்தான் எனச் சாட்சியங்கள் கூறுகின்றன.

அன்று இரவு போதை ஏற்றிக் கொள்ள வேண்டும் எனப் பைத்தியம் போல அலைந்த ராகுல் - மொய்த்ரா ஜோடி, அதற்காக பதினைந்தாயிரம் ரூபாயைத் தாராளமாகச் செலவழித்திருக்கிறது. ஒரு ஐநூறு ரூபாயைச் சுருட்டிக் கொண்டு, அதைப் பயன்படுத்திதான் ராகுல் போதை மருந்தை உறிஞ்சியிருக்கிறார். இப்படிப்பட்ட உல்லாச - ஊதாரிப் பேர்வழி, மேடையேறி, மைக்கைப் பிடித்துக் கொண்டு, ஏழை - மக்களைப் பற்றியும், நாட்டு நலனைப் பற்றியும் பேசுவது கனவில் வருவதைக் கூடப் பொறுத்துக் கொள்ள முடியுமா?

போதை தலைக்கேறிப் போய் செத்துப்போன விவேக் மொய்த்ரா 1980-களில் இருந்தே பா.ஜ.க.வின் இளைஞர் அணியில் உறுப்பினராக இருந்து வந்துள்ளார். பா.ஜ.க.வின் தலைவர்கள், ''மொய்த்ரா உற்சாகமாகச் செயல்பட்ட கட்சி ஊழியர்'' எனப் புகழஞ்சலி செலுத்துகின்றனர். அவர் அப்படி உற்சாகமாகச் செய்த கட்சி வேலை என்ன தெரியுமா? கட்சிக்காக தரகு முதலாளிகளிடம் வாங்கும் நன்கொடையைப் பதுக்கி வைப்பதில், பிரமோத் மகாஜனுக்கு உதவியாக இருந்திருக்கிறார். பிரமோத் மகாஜனின் இரகசிய நடவடிக்கைகள் அனைத்திற்கும் பக்கபலமாக இருந்து வந்துள்ளார்.

பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ்.இன் அடிமட்டத் தொண்டர்கள் இந்து மதவெறி போதை தலைக்கேறிப் போய், சூலத்தைக் கையில் வைத்துக் கொண்டு ஊரைக் கொளுத்தும்பொழுது, மொய்த்ரா ஒரு கையில் பணப் பெட்டியோடும், இன்னொரு கையில் ஒயின் பாட்டிலோடும் உல்லாசமாக இருந்திருக்கிறார். இந்தப் பண்பாடு இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரானதல்ல. இந்து மதவெறி அரசியலின் இன்னொரு பக்கம்தான் ராகுல் - மொய்த்ராவின் அந்தரங்க வாழ்க்கை. கஞ்சா போதையும் சோமபானம் - சுராபானம் அடித்துவிட்டு சுருண்டு போவதும் ஆரிய - இந்துப் பண்பாடு தானே!

சங்கப் பரிவார அமைப்புகளில், ஊழல் - உல்லாசம் - ஊதாரித்தனத்தில் மூழ்கித் திளைக்கும் தலைவர்கள் இருப்பது, தெகல்கா ஊழல், பெட்ரோல் பங்க் ஒதுக்கீடு ஊழல், நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்க இலஞ்சம் வாங்கியது, தகாத பாலியல் உறவில் பா.ஜ.க.வின் பொதுச் செயலாளர் சஞ்சய் ஜோஷி மாட்டிக் கொண்டது ஆகியவற்றின் மூலம் ஏற்கெனவே அம்பலமாகியிருக்கிறது. அதனால்தான், வாஜ்பாயி போன்ற பெருந்தலைவர்கள்கூட போதை பழக்கத்துக்கு அடிமையான ராகுல் மகாஜனைக் கைகழுவிவிடாமல் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

•••

**ரா**குல் மகாஜனைப் போல உல்லாசம் - ஊதாரித்தனத்தில் திளைக்கும் இளம் தலைமுறையை அனைத்து ஓட்டுக்கட்சிகளிலும் காண முடியும். அந்நிய நாட்டுப் பெண் ஒருவருடன் இலண்டனில் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த ராகுல் காந்தி, திடீரென அரசியலுக்கு இழுத்து வரப்பட்டு, எம்.பி. ஆக்கப்பட்டார்.

இறந்து போன பிஜு பட் நாயக்கின் மகன் என்ற ஒரே தகுதியின் காரணமாக ஒரிசாவின் முதல் அமைச்சர் ஆக்கப்பட்ட நவீன் பட்நாயக், மாலை நேரமானால், தனது நண்பர்களோடு சேர்ந்து கொண்டு குடியும் கும்மாளமுமாகப் பொழுதை ஓட்டுவார்.

தில்லியில் உள்ள ஒரு மதுபான விடுதியில், நள்ளிரவு நேரத்தில் தனக்கு ''தண்ணி'' ஊத்தி தர மறுத்ததற்காக ஜெஸிகா லால் என்ற பணிப்பெண்ணைப் பலர் முன்னிலையில் சுட்டுக் கொன்றான், சண்டிகர் நகர காங்கிரசு தலைவராக இருந்த வினோத் சர்மாவின் மகன் மனுசர்மா.

முலயம் சிங் யாதவின் மகனும், நாடாளுமன்ற உறுப்பினருமான அகிலேஷ் யாதவ் மீது, ஒரு பெண்ணை மானபங்கப்படுத்த முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டது. இதனால்தான் அனைத்து ஓட்டுக் கட்சிகளும் ராகுல் மகாஜன் விவகாரத்தை ''செண்டிமெண்ட்'' கலந்து முடித்து விடுவதில் ஒன்றாக நிற்கின்றன.

பரூக் அப்துல்லாவின் மகன் ஓமர் அப்துல்லா (தேசிய மாநாட்டுக் கட்சி); ராஜேஷ் பைலட்டின் மகன் சச்சின் பைலட் (காங்கிரசு); விஜயராஜே சிந்தியாவின் மகன் துஷ்யந்த் (பா.ஜ.க.); முரசொலி மாறனின் மகன் தயாநிதி மாறன் (தி.மு.க.) என ஒரு பெரிய இளைய தலைமுறை பட்டாளம், ஓட்டுக்கட்சிகளிலும் அரசாங்கத்திலும் அதிகாரமிக்க பதவிகளில் திணிக்கப்பட்டுள்ளனர்.

திராவிடம், தேசியம், பொதுவுடைமை, ஜனநாயகம் என ஏதாவதொரு கொள்கை, தத்துவம், கோட்பாடு அடிப்படையில் தமது அரசியல்வாழ்வைத் தொடங்கிய பழைய தலைமுறை, சுயநலம், பிழைப்புவாதம், இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், பொறுக்கி அரசியல் என்ற சீரழிந்த பண்புகளோடுதான் ஓய்வு பெறுகிறது. தரகு முதலாளிகளான ராகுல் பஜாஜ், அனில் அம்பானி, விஜய் மல்லையா மற்றும் 220 கோடி ரூபாய் குடும்பச் சொத்து கொண்ட அமிதாப்பின் மனைவி ஜெயாபச்சன் போன்ற கோடீசுவரர்களைக் கூட எம்.பி.யாகத் தேர்ந்தெடுத்து அனுப்பும் அளவிற்கு ஓட்டுக்கட்சிகள் கொள்கை, கோட்பாடு எல்லாவற்றையும் மூட்டை கட்டி வைத்துவிட்டன.

புதிய தலைமுறை அரசியல்வாதிகளின் கூட்டம் இச்சீரழிவுகளுக்கு எதிரான போராட்டத்தின் விளைவாக தலை எடுக்கவில்லை. மாறாக, இச்சீரழிவுகளின் பக்க விளைவாக அரசியலில் நுழைந்திருக்கிறார்கள் அல்லது திணிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், இவர்கள் எந்தவித சமூக விழுமியங்கள், மதிப்பீடுகள், ஒழுங்குமுறைகளையும் அடிப்படையாக வைத்து வளர்த்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல. அதனால், இப்புதிய இளந்தலைமுறை அரசியல் தலைவர்கள் ஏகாதிபத்திய ஒட்டுண்ணிச் சுரண்டலையும், அடக்குமுறையையும் மட்டுமல்ல; ''டிஸ்கொத்தே'' பண்பாட்டையும் நியாயப்படுத்துவார்கள்.

• செல்வம்

www.padippakam.com

## பெட்ரோல் - டீசல் விலை உயர்வு:

# அரசே நடத்தும் பகற்கொள்ளை

சட்டசபைத் தேர்தல்கள் முடியும் வரை காத்திருந்துவிட்டு பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தியிருப்பதன் மூலம், மக்களின் முதுகில் குத்தும் நம்பிக்கை துரோகிகள்தான் காங்கிரசு கும்பல் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. கோதுமை, உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்து கொண்டிருக்கும்பொழுது, எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல, பெட்ரோல் (லிட்டருக்கு நான்கு ரூபாய்), டீசல் (லிட்டருக்கு இரண்டு ரூபாய்) விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன.

''நியாயமாகப் பார்த்தால், பெட்ரோலுக்கு ரூ. 9.33-ம், டீசலுக்கு ரூ. 10.43-ம், மண்ணெண்ணெய்க்கு ரூ.17.16-ம், சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றுக்கு ரூ. 114.45-ம் உயர்த்தியிருக்க வேண்டும். ஆனால், சாதாரண மனிதனின் நலன் கருதி அவ்வளவு பெரிய சுமையை நாங்கள் மக்கள் மீது ஏற்றி வைக்கவில்லை'' என மன்மோகன் - ப.சிதம்பரம் கும்பல், இந்த விலை உயர்வுக்குத் திமிராகப் பதில் அளித்திருக்கிறது.

வழக்கம் போலவே, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை அதிகரித்துவிட்டதால்தான், உள்நாட்டில் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தியிருப்பதாகக் கூறுகிறது, மைய அரசு. இவர்களின் வாதப்படி பார்த்தால், இந்தியாவைப் போல கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்படும் அனைத்து நாடுகளிலும், பெட்ரோல், டீசல் விலை ஏறத்தாழ இந்தியாவில் இருப்பதைப் போல இருக்க வேண்டும்.

ஆனால், சந்தைதான் சரக்கின் விலையைத் தீர்மானிக்க வேண்டும் என முழுச் சுதந்திரம் நிலவும் அமெரிக்காவில், ஒரு லிட்டர் பெட்ரோலின் விலை ரூ. 27.51தான். கனடாவில் ரூ.22/-க்கும், சீனாவில் ரூ. 18.73-க்கும்; அண்டை நாடான பாகிஸ்தானில் ரூ. 27/-க்கும் ஒரு லிட்டர் பெட்ரோல் விற்கப்படுகிறது. ஆனால், இந்தியாவிலோ ஒரு லிட்டர் பெட்ரோலின் விலை ரூ. 51.83. மற்ற நாடுகளை விட, இந்தியாவில் பெட்ரோலின் விலை இரு மடங்குக்கும் அதிகமாக விற்கப்படுவதன் காரணம் என்ன?'

கச்சா எண்ணெயைச் சுத்திகரிக்கும் பொதுத்துறை நிறுவனங்கள் (ஆயில் இந்தியா, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகம், இந்திய எரிவாயு ஆணையம்) எண்ணெயைச் சந்தையில் விற்கும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு (பாரத் பெட்ரோலியம், இந்தியன் ஆயில், இந்துஸ்தான் பெட்ரோலியம்) ஒரு லிட்டர் பெட்ரோலை, ரூ. 18.10/-க்கும்; ஒரு லிட்டர் டீசலை ரூ. 19.75-க்கும் தான் விற்பதாகக் கூறுகிறார், சுப்பிரமணிய சுவாமி. அதே பெட்ரோல், டீசலின் விலைகள், ''பங்க்''குகளில் விற்கப்படும்பொழுது, இருமடங்காக எகிறிப் போவதன் மர்மம் என்ன?

இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயின் மீதும், அதிலிருந்து தயாரிக்கப்படும் பெட்ரோல், டீசல், மண்ணெய்ணெய், சமையல் எரிவாயு ஆகியவற்றின் மீதும் மைய / மாநில அரசுகள் விதித்துவரும் பலவிதமான வரிகள்தான் இந்த அநியாய விலைக்கு காரணம். ஒரு லிட்டர் பெட்ரோலின் விலையில் (ரூ. 51.83) ஏறத்தாழ 57 சதவீதமும், ஒரு லிட்டர் டீசலின் விலையில் (ரூ. 35.95) ஏறத்தாழ 36 சதவீதமும் பல்வேறு வரிகளாக விதிக்கப்பட்டுள்ளன. ஒரு பொருளின் சந்தை விலையில் / மதிப்பில் பாதிக்கு மேல் வரியாக மக்களிடமிருந்து பிடுங்கப்படுகிறது என்றால், இதனைச் சட்டபூர்வமாக நடக்கும் வழிப்பறிக் கொள்ளை என்றுதான் சொல்ல வேண்டும்.

மைய அரசு பெட்ரோலியப் பொருட்கள் மீது சுங்கவரி, கலால் வரி, கூடுதல் கலால் வரி, கல்வி வரி, ராயல்டி, ''செஸ்'' என்ற உற்பத்தித் தீர்வை ஆகிய வரிகளை விதிக்கிறது. மாநில அரசுகளுக்கு மைய அரசைப் போலக் கொள்ளையடிக்கும் அதிகாரம் இல்லாததால், விற்பனை வரியை மட்டும் விதிக்கின்றன.

ஒரு ஆண்டில் மைய அரசால் வசூலிக்கப்படும் மொத்த கலால் வரியில் 44 சதவீதம், பெட்ரோலியப் பொருட்களின் மூலம் கிடைக்கிறது. ஒரு ஆண்டில் மைய அரசின் மொத்த வருமானத்தில் 21 சதவீதம், பெட்ரோலியப் பொருட்கள் மீது விதிக்கப்படும் வரிகள்; பெட்ரோலிய பொதுத்துறை நிறுவனங்கள் மைய அரசுக்கு வழங்கும் இலாப ஈவு ஆகியவற்றின் மூலம்





படிப்பகம்

www.padippakam.com

கிடைக்கிறது. மாநில அரசுகளுக்குக் கிடைக்கும் மொத்த வரி வருமானத்தில், ஏறத்தாழ 30 சதவீதம் பெட்ரோலியப் பொருட்கள் மீது விதிக்கப்படும் விற்பனை வரி மூலம் கிடைக்கிறது.

மைய / மாநில அரசுகளைப் பொருத்தவரை பெட்ரோலிய பொருட்கள் என்பது பொன் முட்டையிடும் வாத்து. பெட்ரோலியப் பொருட்களின் விலைகள் ஒவ்வொரு முறை உயர்த்தப்படும் போதும், மைய / மாநில அரசுகளின் வரி வருமானமும் எகிறிப் பாய்கிறது. பெட்ரோலியப் பொருட்கள் மீது விதிக்கப்படும் வரிகள் மூலம் 2002-03 ஆம் ஆண்டில் மைய அரசிற்குக் கிடைத்த வருமானம் 64,595 கோடி ரூபாய். இது, பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வினால், 2005-06 ஆம்ஆண்டில் 77,800 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. மாநில அரசுகளுக்கு விற்பனை வரி மூலம் 2002-03 ஆம் ஆண்டில் கிடைத்த வருமானம் 32,150 கோடி ரூபாய், 2005-06 ஆம் ஆண்டில் 48,800 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. கடந்த நான்கே ஆண்டுகளில் மைய-மாநில அரசுகளுக்குக் கிடைத்துள்ள கூடுதல் வரி வருமானம் ஏறத்தாழ 30,000 கோடி ரூபாய்.

இது போக, மண்ணெண்ணெய்க்கும் சமையல் எரிவாயுவுக்கும் கொடுத்துவந்த 'மானியத்தை', 11,140 கோடி ரூபாயில் இருந்து 3,000 கோடி ரூபாயாகக் குறைத்துக் கொண்டதன் மூலம் மைய அரசிற்குக் கிடைத்துள்ள "எக்ஸ்ட்ரா" வருமானம் 8,000 கோடி ரூபாய். உள்நாட்டில் கிடைக்கும் கச்சா எண்ணெய் மீது விதிக்கப்படும் "செஸ்" வரியின் மூலம் கிடைக்கும் வருமானம் 7,500 கோடி ரூபாய். இந்த வரி வருவாய் போக, பெட்ரோலியப் பொருட்களின் விற்பனையின் மூலம் மைய அரசிற்குக் கிடைக்கும் இலாப ஈவு தனி.

மைய-மாநில அரசுகள் பல ஆண்டுகளாக நடத்தி வரும் இந்த வரிக் கொள்ளையைக் குறைத்துக் கொண்டாலே, பெட்ரோலியப் பொருட்களின் விலைகள் கணிசமாகக் குறைந்துவிடும். ஆனால், வரி குறைப்புக்குத் தயாராக இல்லாத மைய அரசு, பெட்ரோல் - டீசல் விலைகளை உயர்த்தியதன் மூலம், மேலும் 10,000 கோடி ரூபாய்க்கு வருமானம் தேடிக் கொண்டு விட்டது.

**பெட்ரோலிய பொதுத்துறை நிறுவனங்கள் உண்மையிலேயே நட்டத்தில் இயங்குவதாக வைத்துக் கொண்டால், பெட்ரோலிய பொருட்களின் விற்பனை மூலம் மக்களிடமிருந்து பறிக்கப்படும் 1,26,600 கோடி ரூபாய் வரியில் இருந்து இந்த நட்டத்தைச் சரி செய்து கொள்ள முடியும்.**

கச்சா எண்ணெயைச் சுத்திகரிக்கும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு 2004-05 கிடைத்துள்ள இலாபம் 15,600 கோடி ரூபாய்; 2005-06 ஆம் நிதி ஆண்டின் முதல் 9 மாதத்தில் கிடைத்துள்ள இலாபம் 14,600 கோடி ரூபாய். உண்மை இப்படியிருக்க, மைய அரசோ, பெட்ரோலியப் பொருட்களை சந்தை விலைக்குக் குறைவாக விற்பதால், பெட்ரோலிய பொதுத்துறை நிறுவனங்களுக்கு 73,500 கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாகப் புளுகுணி பிரச்சாரத்தை நடத்தி வருகிறது.

தனியார் முதலாளிகள் நட்டக் கணக்குக் காட்டுவதற்காகத் தங்கள் குடும்ப நிறுவனங்களைத் தனித்தனியாகப் பிரித்து வைத்திருப்பதைப் போல, மையஅரசும் எண்ணெய் சுத்திகரிப்பு பொதுத்துறை நிறுவனங்களையும், பெட்ரோலியப் பொருட்களை விற்பனை செய்யும் பொதுத்துறை நிறுவனங்களையும் தனித்தனியாக பிரித்து வைத்துக் கொண்டு, நட்டம், நட்டமென முதலைக் கண்ணீர் வடிக்கிறது.

பெட்ரோலியப் பொருட்களுக்கு இன்னமும் மானியம் வழங்குவதால் தான், பெட்ரோலிய பொதுத்துறை நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதாகக் கூசாமல் புளுகி வருகிறார், மன்மோகன் சிங். மற்ற நாடுகளை ஒப்பிடும் பொழுது, இருபது ரூபாயில் இருந்து முப்பது ரூபாய்க்குள் விற்க வேண்டிய பெட்ரோலை, ஐம்பது ரூபாய்க்கு விற்றுக் கொண்டு, பெட்ரோலியப் பொருட்களுக்கு மானியம் வழங்குகிறோம் என்றால், இதைவிட மோசடித்தனம் வேறெதுவும் இருக்க முடியாது.

பெட்ரோலிய பொதுத்துறை நிறுவனங்கள் உண்மையிலேயே நட்டத்தில் இயங்குவதாக வைத்துக் கொண்டால், மக்களிடமிருந்து பறிக்கப்படும் 1,26,600 கோடி ரூபாய் வரியில் இருந்து இந்த நட்டத்தைச் சரி செய்து கொள்ள முடியும். அதற்கு மைய அரசோ, மாநில அரசுகளோ தயாராக இல்லை. மாறாக, வரியைக் குறைத்தால், வரியைக் கொண்டு நட்டத்தை ஈடு செய்தால், சமூக நலத் திட்டங்களுக்குச் செலவு செய்யப் பணம் இல்லாமல் போய்விடும் எனப் பயமுறுத்துகிறார், ப.சிதம்பரம். நம்மிடமிருந்து நைசாக உருவிக் கொண்ட பணத்தில் இருந்து கொஞ்சத்தை நமக்கே திருப்பித் தரும் இந்த ஜேப்படி திருடர்களின் கருணையை என்னவென்று சொல்வது?

பொதுமக்கள் வாங்கிப் பயன்படுத்தும் பெட்ரோலியப் பொருட்களின் மீது விதிக்கப்படும் வரியைக் கொஞ்சம் கூட குறைத்துக் கொள்ள மறுத்துவரும் மைய அரசு, அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனம் பெட்ரோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு 4,000 கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகைகளை வாரி வழங்கியிருக்கிறது. உள்நாட்டில் உள்ள கச்சா எண்ணெய் வயல்களைக் குத்தகைக்கு எடுத்துள்ள பன்னாட்டு நிறுவனங்களுக்கும் வரிச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. இந்த வரிச் சலுகைகளை நிறுத்தினாலே ஒரு லிட்டர் பெட்ரோலின் விலையை நான்கு ரூபாயும்; ஒரு லிட்டர் டீசலின் விலையை இரண்டு ரூபாயும் உயர்த்த வேண்டிய "கட்டாயம்" வந்திருக்காது.

சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை உயருவதற்கு, அமெரிக்கா நடத்திவரும் தீவிரவாதத்துக்கு எதிரான போரும் ஒரு காரணம் எனக் கூறப்படுகிறது. மேற்காசியாவிலும், மத்திய ஆசியாவிலும் உள்ள கச்சா எண்ணெய் வளத்தை அமெரிக்காவின் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் நோக்கத்தோடுதான் இந்தப் போரே நடத்தப்படுகிறது. பெட்ரோலியப் பொருட்களின் உற்பத்தியிலும், வியாபாரத்திலும் அமெரிக்காவின் நலன்களுக்கு எதிராகச் செயல்படக் கூடாது என்பதற்காகத்தான், மலிவான விலையில் எரிவாயு கிடைக்க வாய்ப்பிருந்த, இந்தியா-ஈரான் குழாய் எரிவாயு திட்டத்தைக் கைகழுவினார், மன்மோகன் சிங்.

பொது போக்குவரத்தை அதிகப்படுத்தி, கார்-இருசக்கர வாகனங்களின் விற்பனையைக் கட்டுப்படுத்தினால், பெட்ரோல் - டீசல் நுகர்வைக் கணிசமாகக் குறைக்க முடியும். ஆனால் ஆளு


படிப்பகம்

www.padippakam.com

கும்பலோ, இதற்கு நேர்மாறாக பன்னாட்டு மோட்டார் நிறுவனங்களின் இலாபத்திற்காக, பொது போக்குவரத்து வசதியைக் குறைத்துக் 'கொண்டே போகிறது. மூலவளத்தை உறிஞ்சித்தின்னும் இந்த கார்-இரு சக்கர வாகனங்களின் விற்பனை தாராளமயத்தின் சாதனையாகக் கூறப்படுகிறது. அமெரிக்காவின் சேவைக்காக மக்களைக் கொள்ளையடிப்போமே தவிர, மாற்று வழியைப் பற்றிச்சிந்திக்க மாட்டோம் என்பதுதான் மன்மோகன் சிங் - ப.சிதம்பரம் கும்பலின் நிலைப்பாடு. முதலாளித்துவ அரசுதான் மிகப் பெரிய சுரண்டல் நிறுவனம் என மாமேதை மார்க்ஸ் கூறியதை, இந்த பெட்ரோல்-டீசல் விலை உயர்வு அப்பட்டமாக நிருபித்துக் காட்டிவிட்டது.

•••

பன்னாட்டு நிறுவனங்களுக்கும், தரகு முதலாளிகளுக்கும் தாராளமாக வரிச் சலுகைகள் காட்ட வேண்டும். மக்களின் மீது வரி-கட்டணச் சுமைகளை ஏற்றி வைத்து, அரசின் கஜானாவை நிரப்பிக் கொள்ள வேண்டும் - இதுதான் தனியார்மய - தாராளமயப் பொருளாதாரக் கொள்கை.

இந்தியாவில் தாராளமயம் அமலுக்கு வந்தபின்தான், இதுவரை கண்டும், கேட்டிராத வகையில் பல்வேறு விதமான சேவைகள் (தொலைபேசி இணைப்பு, வங்கியில் காசோலை வாங்குவது போன்றவை) மீதும் வரி விதிக்கப்பட்டு, பொதுமக்கள் சுரண்டப்படுவதைப் பார்க்கிறோம். இந்த அடிப்படையில்தான் பெட்ரோலியப் பொருட்களின் மீது அநியாய வரி விதிக்கப்படுவதையும், அவற்றின் விலை தாங்க முடியாத அளவிற்கு உயர்த்தப்படுவதையும் பார்க்க வேண்டும்.

கச்சா எண்ணெயின் விலை சர்வதேசச் சந்தையில் ஏற்ற - இறக்கங்களைக் கண்டாலும், பெட்ரோலியப் பொருட்களின் விலையை சந்தைக்கு ஏற்றவாறு தீர்மானிக்கக் கூடாது என்ற மைய அரசின் கொள்கை, தாராளமயத்தின் பின்தான் நீக்கப்பட்டது. மைய அரசின் அதிகாரத்தில் உட்கார்ந்திருந்த பொழுது, பா.ஜ.க.தான் உலகவங்கி - ஐ.எம்.எஃப்-இன் உத்தரவுக்கு ஏற்ப இந்தக் கொள்கையை நீக்கியது. இன்று அவர்கள் உத்தமர்களைப் போல, பெட்ரோல்-டீசல் விலையை எதிர்த்துப் போராடுகிறார்கள்.

ஆட்சியில் இருந்தால் விலை உயர்வை ஆதரிப்பது, எதிர்க்கட்சியாக இருந்தால் விலை உயர்வை எதிர்ப்பது என்ற நாடகத்தை ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் திறம்பட நடத்தி வருகின்றன. ஒருபுறம் பெட்ரோல் - டீசல் விலை உயர்வை எதிர்த்துக் கொண்டு, இன்னொருபுறம் மன்மோகன் - ப.சிதம்பரம் கும்பலின் ஆட்சிக்கு ஆதரவையும் கொடுத்துக் கொண்டு இருக்கும் இடதுசாரிக் கட்சிகளின் அரசியல் மோசடி, சந்தர்ப்பவாத அரசியலில் ஒரு புதிய அத்தியாயத்தைப் படைத்து வருகிறது.

ஓட்டுக் கட்சிகளைப் பொருத்த வரை பெட்ரோல் - டீசல் விலை உயர்வு தனியார்மயம் - தாராளமயத்தின் விளைவு அல்ல; மாறாக, மன்மோகன் சிங் - ப.சிதம்பரத்தின் தவறான பொருளாதார முடிவு. மன்மோகன் சிங் - ப.சிதம்பரத்தை அம்பலப்படுத்திப் போராடினால், எதிர்க்கட்சிகளுக்கு அடுத்த தேர்தலில் மறுவாழ்வு கிடைக்கும். ஆனால், தனியார்மயம் - தாராளமயத்தை எதிர்த்தால், ஓட்டுக்கட்சி தலைவர்களின் அரசியல் வாழ்வே அஸ்தமனமாகி விடும் அல்லவா!

• ரஹீம்

## "மக்களையே எரிக்கிறது பெட்ரோல்-டீசல் விலை உயர்வு" - கண்டன ஆர்ப்பாட்டம்

பெட்ரோல்-டீசல் விலையேற்றத்தின் மூலம் மக்கள் மீது மிகப்பெரும் பொருளாதாரத் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டுள்ள காங்கிரசு கூட்டணி அரசை எதிர்த்து, 17.6.06 அன்று மாலை சென்னை மெமோரியல் ஹால் அருகே புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. பு.ஜ.தொ.மு. தலைவர் தோழர் முகுந்தன் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் சிறப்புரையாற்றிய பு.ஜ.தொ.மு. பொருளாளர் தோழர் விஜயகுமார், உள்நாட்டு பெட்ரோல் வளங்கள் ரிலையன்ஸ் அம்பானி குடும்பத்துக்குத் தாரை வார்க்கப்பட்டு அக்குடும்பம் ஆண்டுக்கு ரூ. 4000 கோடிக்கு மேல் கொள்ளை லாபமடிப்பதையும், இறக்குமதி பெட்ரோல் மீது ஏறத்தாழ 57% அளவுக்கு தீர்வை வரிகளை விதித்து ஆசியாவிலேயே மிகப் பெரிய கொள்ளை நிறுவனமாக இந்திய அரசு இருப்பதையும், உலகச் சந்தையுடன் இந்தியச் சந்தையை இணைத்து அதனால் ஏற்படும் சுமைகளை மக்கள் மீது திணிப்பதையும், சேவைத்துறையாகிய அரசு எண்ணெய் நிறுவனங்களைத் தனியார்மயமாக்கி வருவதையும், இவை மறுகாலனியாதிக்கத்தின் கொடிய தாக்குதல் என்பதைப் புள்ளிவிவர ஆதாரங்களோடு விளக்கினார்.



உடனடி பொருளாதார நலன் என்ற வரம்போடு இதர ஓட்டுக் கட்சிகள் பெட்ரோல் விலையேற்றத்துக்கு எதிராகக் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திய சூழலில், உலகமயத்தால் ஏற்பட்டுள்ள கோர விளைவையும் மறுகாலனிய தாக்குதலையும் எதிர்த்து விண்ணதிரும் முழக்கங்களுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டமும், இதர நாடுகளின் பெட்ரோல் விலையை ஒப்பிட்டு பட்டியலிட்டுக் காட்டிய துண்டுப் பிரசுரமும் உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

*- பு.ஜ. செய்தியாளர்கள்*


படிப்பகம்

www.padippakam.com

7-ஆம் பக்கத் தொடர்ச்சி...

எந்தவொரு இசுலாமிய அடிப்படை வாத இயக்கமும் பர்வீன் மீது ஏவிவிடப் பட்ட காட்டுமிராண்டித்தனத்தை இது வரை கண்டிக்கவில்லை. எந்தவொரு ஜமாத்தும் இசுலாமிய ஏழைப் பெண் மீது நடத்தப்பட்டுள்ள இக்கொடுஞ் செயலுக்கு எதிராக வாய்திறக்கவில்லை.

''என்னை மாதிரியே எங்க ஊருல ஒரு முசுலீம் பொண்ணு. இந்து பைய னோட ஓடிப் போயிருக்கு; அந்தப் பெண்ணோட அப்பா வசதியானவரு. இவனுங்களுக்குத் தைரியம் இருந்தா அந்தப் பொண்ணுக்கும் மொட்டைய டிக்க வேண்டியதுதானே? எனக்கு மொட்டையடிக்க இவனுங்க யாரு?'' என்று கோபம் கொப்பளிக்க கேட்கிறார் பர்வீன். பணக்காரர்கள் என்றால் பல்லி ளிப்பு; ஏழைகள் என்றால் காட்டு மிராண்டித்தனம் என மதவெறியர்கள் இரட்டை அளவுகோல்களை வைத்திருப் பதை அவர் உடைத்துக் காட்டிவிட்டார்.

கள்ளக்குறிச்சி பள்ளிவாசல் சொத்தை யார் முழு உரிமையோடு பொறுக்கித் தின்பது என்பதில் இரு மத வெறி கோஷ்டிகளுக்கிடையே நடக் கும் அதிகாரச் சண்டையில் பலிகிடா வாக்கப்பட்டுள்ள ஏழைப் பெண்தான் பர்வீன். 'நாங்கள்தான் இசுலாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை விசுவா சமாகக் கடைபிடிப்பவர்கள்' என்று தமது ஆதிக்கத்தையும் அதிகாரத்தை யும் எதிர்கோஷ்டிக்கு நிரூபித்துக் காட் டுவதற்காக ஒரு கோஷ்டி இப்படி யொரு காட்டுமிராண்டித்தனத்தை தாலிபான் வழியில் நடத்தியிருக்கிறது. பள்ளிவாசல் பராமரிப்பு சங்கத் தலைவ ராக இருப்பவர் தி.மு.க.வின் இளைஞர் அணி அமைப்பாளராம். பகுத்தறிவு திராவிடம் காலிப் பெருங்காய டப்பா வாகி, சிறுபான்மையினர் ஓட்டுக்காக இத்தகைய மதவெறியர்களைத் தலை மைப் பொறுப்பில் அமர்த்துமளவுக்கு பிழைப்புவாதத்தில் தி.மு.க. புதிய பரி மாணத்தை எட்டியிருக்கிறது.

''நாட்டுல யாருக்குமே நடக்காத கொடுமையும் அசிங்கமும் எம்பொண ணுக்கு நடந்திருக்கு. இனிமே நாங்க எப்படி வெளியே தலைகாட்டு வோம்னே தெரியலையே!'' என்று வேதனையில் புலம்புகிறார் ஜஹாங்கீர். மதவெறி குண்டர்களின் தாக்குதலால் வீங்கிப் போன கன்னங்களோடும் மொட்டைத் தலையோடும் பார்ப்ப தற்கே பரிதாபமாக இருக்கும் பர்வீன், ''என்னை அடித்து அவமானப்படுத்திய ஒருத்தன் விடாம எல்லாருக்கும் தண் டனை கொடுக்கணும்'' என்று குமுறுகி றார். இது வெறும் குமுறல் அல்ல; மத வெறி காட்டுமிராண்டித்தனத்தை எதிர்க்கும் ஒவ்வொருவருக்கும் விடப் பட்டுள்ள சவால்! பெரியார் பிறந்த மண் என்ற பெருமையுடன் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்குமா அல்லது மத வெறிக் காட்டுமிராண்டிகளின் அட்டூழி யங்களுக்குத் தலைவணங்கி அவமா னங்களையும் அடக்குமுறைகளையும் சுமந்து கொண்டு நிற்குமா என்பது மதச் சார்பற்ற - ஜனநாயக சக்திகளின் போராட்டத்தைப் பொருத்தே உள்ளது.

● தமிழ்மணி

# "பவானி ஆற்றை நஞ்சாக்காதே!"

## - விவசாயிகளின் விழிப்புணர்வு பிரச்சார நடைபயணம்

மேற்குத் தொடர்ச்சி மலையில் பிறந்து மூலிகைகளில் குளித்துவரும் பவானி ஆறு இன்று சாக்கடைக் கழிவாக மாறி விட்டது. திருப்பூர் சாயப்பட்டறை முதலாளிகளால் நொய்யல் ஆறு நாசமாக்கப்பட்டதைப் போலவே, பவானி ஆறும் துணி ஆலை - காகித ஆலை முதலாளிகளால் நச்சுக் கழிவுச் சாக்க டையாக மாறியுள்ளது.

ஆலைக் கழிவுகளை பவானி ஆற்றில் கொட்டி நஞ்சாக்கி வருவதன் விளைவாக, இப்பகுதியில் விளைநிலங்கள் உவ ராக மாறி வருகின்றன. நிலமும் நிலத்தடி நீரும் நஞ்சாகி இனம்புரியாத நோய்கள் பரவுகின்றன. கால்நடைகள் மலடா கிப் போகின்றன. மரங்களும் செடிகளும் பட்டுப்போய், விவ சாயம் பொய்த்துப்போய் விவசாயிகள் தத்தளிக்கின்றனர்.

கடந்த ஓராண்டு காலமாக கீழ்பவானி வட்டார விவசாயி கள், துணிஆலை - காகித் ஆலை முதலாளிகளின் இப்பயங்க ரவாத அட்டூழியங்களுக்கு எதிராகப் பல்வேறு போராட் டங்களை நடத்தி வந்துள்ள னர். அதன் தொடர்ச்சியாக, ''பவானி ஆறு குடிநீர் - நிலத் தடி நீர் பாதுகாப்புக் குழு'' என்ற அமைப்பின் வாயி லாக, பவானி ஆறு நஞ்சாக் கப்பட்டு வருவதைத் தடுத்து நிறுத்தக் கோரி விழிப்புணர்வு பிரச்சார நடைபயணத்தை கடந்த ஜூன் 18-19 தேதிகளில் நடத்தியுள்ளனர். நூற்றுக்க ணக்கான விவசாயிகள் பங் கேற்க, சத்தியமங்கலம் கோம்பு பள்ளத்தில் 18.6.06 அன்று இந்நடைபயணத்தை சென்னை உயர்நீதி மன்ற மூத்த வழக்குரைஞர் பொ.ரத்தி னம் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.



இப்பிரச்சார நடைபயணத்தில் பங்கேற்று உதவுமாறு அனைத்து கட்சிகள் - அமைப்புகளுக்கும் விவசாயிகள் விடுத்த அறைகூவலை ஏற்று, ம.க.இ.க. தோழர்கள் இதில் ஊக்கமுடன் பங்கேற்றனர். ம.க.இ.க. ஒலிப்பேழை பாடல்கள் எங்கும் எதிரொலிக்க, கோபி, கவுந்தப்பாடி, சித்தோடு வழியா கச் சென்ற இவ்விழிப்புணர்வு நடைபயணத்தை வழியெங் கும் விவசாயிகளும் உழைக்கும் மக்களும் உற்சாகத்துடன் வரவேற்று ஆதரித்தனர். திருப்பூர் சாயப்பட்டறை முதலாளி கள் நொய்யல் ஆற்றை நஞ்சாக்கியதால் ஏற்பட்ட கோரமான விளைவைச் சித்தரிக்கும் ''புதிய ஜனநாயகம்'' இதழின் அட் டைப்படத்தைக் கையிலேந்தி விவசாய முன்னணியாளர்க ளும் ம.க.இ.க. தோழர்களும் வழியெங்கும் விளக்கக் கூட்டங் களை நடத்தினர். பவானி, தாமிரவருணி, பாலாறு உள்ளிட்டு நீர் ஆதாரங்கள் மீது சமூக உரிமையை நிலைநாட்டுவ தற்காக தமிழக மக்கள் நடத் திவரும் போராட்டங்கள் இணைக்கப்பட்டு, இவற்றை மறுகாலனியாதிக் கத்திற்கு எதிரான போராட்ட மாக வளர்க்க வேண்டிய அவ சியத்தை இக்கூட்டங்களில் வலியுறுத்தினர். ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் 19-ஆம் தேதியன்று மனு கொடுத்து இப்பிரச்சார நடை பயணத்தை நிறைவு செய்த விவசாயிகள், அடுத்தகட்ட போராட்டத்திற்கு ஆயத்த மாகி வருகின்றனர்.

- பு.ஜ. செய்தியாளர்கள்.

www.padippakam.com

# தீவிரமாகி வரும் மறுகாலனியாதிக்கம் கொத்தடிமைக் கூடாரமாகும் தமிழகம்

மாங்கல்ய திட்டம்; இது ஆட்சியாளர்கள் அறிவித்துள்ள புதியதொரு திருமண உதவித் திட்டம் அல்ல; நகைக்கடைக் காரர்கள் விளம்பரப்படுத்தியுள்ள புதியதொரு நகை சேமிப் புத் திட்டமும் அல்ல. மோசடி சீட்டுக் கம்பெனிக்காரர்கள் ''வாழ்க வளமுடன்'' என்ற பெயரில் தொழில் நடத்துவதைப் போல, இளஞ் சிறுமிகளைக் கொத்தடிமைகளாக்கிச் சுரண்ட பஞ்சாலை-நூற்பாலை முதலாளிகள் உருவாக்கியுள்ள திட் டத்தின் பெயர்தான் மாங்கல்ய திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் கொத்தடிமைகளாகச் சேர்க்கப்படும் இளஞ்சிறுமிகள் நாளொன்றுக்கு 12 முதல் 15 மணிநேரம் வேலை செய்ய வேண்டும். மில் அருகிலுள்ள கொட்டகை யில் தங்க வேண்டும். நாளொன்றுக்கு 25 முதல் 35 ரூபாய் கூலி; இதில் ஏறத்தாழ 10 முதல் 15 ரூபாய் உணவு - தங்குமி டச்செலவுகளுக்காகப் பிடித்தம் செய்யப்படும். மீதித்தொகை முதலாளியிடம் சேமிப்பாக இருக்கும். 3-4 ஆண்டுகளுக்குப் பிறகு - அதாவது அச்சிறுமிக்கு 17-18 வயதாகும் போது அவ ரது திருமணச் செலவுகளுக்காக மொத்தமாக ஏறத்தாழ ரூ. 30,000 தரப்படும்.

இப்படி கணக்கற்ற சிறுமிகள் பழனி, தாராபுரம், புளியம்பட்டி பகுதிகளிலுள்ள மில்களில் கொத்தடிமைகளாக உழல்கின்றனர். மதுரை மாவட்டம் நாகமலை அருகிலுள்ள கீழகுயில்குடி கிராமத்திலிருந்து மட்டும் 10-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட சிறுமிகள் புரோக்கருக்கு ரூ. 1000 கமிசனாகக் கொடுத்து இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர். இதே போல வடிவேல் கரை, கரடிப்பட்டி கிராமங்களிலிருந்தும் சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் பகுதியிலிருந்தும் கணிசமான சிறுமிகள் இத்திட்டத்தில் சேர்ந்து கொத்தடிமைகளாக உழல்கின்றனர்.

மாங்கல்யத் திட்டத்தின் கீழ் கொத்தடிமையாக அவதிப்பட்டு ஊர்திரும்பியுள்ள கீழகுயில்குடி கிராமத்து தலித் சிறுமிகள்.



கீழகுயில்குடி கிராமத்தைச் சேர்ந்த 17 வயதாகும் சீதா, இப்படி கொத்தடிமையாக 3 ஆண்டுகள் வேலை செய்து விட்டு தற்போது ரூ. 30,000 பணத்துடன் வீடு திரும்பி யுள்ளார். எட்டாம் வகுப்பு வரை படித்துவிட்டு வறுமை கார ணமாக மேற்கொண்டு படிக்க வழியில்லாமல் இத்திட்டத்தில் சேர்ந்ததாக அவர் வேதனையுடன் கூறுகிறார். இருப்பினும், பெற்றோருக்கு சிரமம் தராமல் திருமணச் செலவுகளுக்காக ரூ.30,000 சம்பாதித்துக் கொடுத்துள்ள மனநிறைவு அவரி டம் காணப்படுகிறது. சீதா மட்டுமின்றி, அவரது பெற்றோ ரும் இக்கிராமத்திலுள்ள தாழ்த்தப்பட்ட குடும்பங்களும் இந்தக் கொத்தடிமைத் திட்டத்தை விரும்பி ஏற்கின்றனர். ''எங்க புள்ளைங்க அங்கே இங்கேன்னு கூலி வேலை செஞ்சு சீரழியறதவிட இது எவ்வளவோ மேல்; புள்ளைங்க கல்யாண செலவுக்கும் பிரச்சினை இல்லாம இருக்கு'' என்று இக் கொத் தடிமைத்தனத்தை நியாயப்படுத்துகின்றனர்.

ஆனால், மில்களில் கொத்தடிமைகளாகச் சேர்க்கப்படும் இச்சிறுமிகள் ஓய்வில்லாத வேலை, சத்தில்லாத உணவு, சிறிய அறையில் கும்பலாகத் தங்கவைப்பது, உடல்நிலை சரியில்லை என்றாலும் சிகிச்சை செய்ய மறுப்பது, ஆண்டுக்கு ஒரு முறை 5 நாட்கள் மட்டுமே விடுமுறை என கொத்தடிமைகளாக வதைபடுகின்றனர். இதுதவிர பல சிறுமிகள் பாலியல் கொடுமைகளையும் சந்திக்கின்றனர். கசக்கிப் பிழியப்படும் இச்சிறுமிகள் மூன்றாண்டுகளுக்குப் பிறகு வீடு திரும்பும் போது காசநோய், ஆஸ்துமா, இரத்த சோகை, கருப்பை பாதிப்பு



படிப்பகம்

www.padippakam.com



**சிவகாசி அருகே விஜயகரிசல்குளத்தில் உயிருக்கு ஆபத்தான பட்டாசு தயாரிப்புத் தொழிலில் பெற்றோருடன் கொத்தடிமையாக உழலும் சிறுவன்.**

- மாதவிடாய் கோளாறுகள் என எல்லா நோய்களுக்கும் சொந்தக்காரர்களாகி விடுகிறார்கள். பழனியில் கொத்தடிமையாக வேலைக்குச் சேர்க்கப்பட்ட தங்கம் என்ற சிறுமி, ''4 நாள் தான் வேலை செய்தேன். சின்ன ரூமில 15 பேர் தங்கியிருந்தோம். நல்ல சாப்பாடு இல்லை. நாள் பூரா ஓயாம வேலை தான். கைவலி தாங்க முடியல. என்னால வேல செய்ய முடியல. அதனால என்னை வீட்டுக்கு அனுப்பிட்டாங்க. சம்பளமும் தரல'' என்கிறார் வேதனையுடன்.

•••

**ஜூ**ன் 12-ஆம் நாள். சென்னை மெரீனா கடற்கரையில் சில இளஞ்சிறுவர்கள் மாலை வேளையில் கையில் தூக்கு வாளியுடன் சுண்டல் விற்றுக் கொண்டிருந்தனர். அன்று அனைத்துலக குழந்தைத் தொழிலாளர் உழைப்புமுறை ஒழிப்பு நாள். அந்நாளில் தொழிலாளர் துறையைச் சேர்ந்த சில அதிகாரிகள் அங்கு சென்று சுண்டல் விற்கும் சிறுவர்களை அழைத்து விசாரித்தனர். அச்சிறுவர்களோ, தாங்கள் பகலில் பள்ளிக்குச் சென்றுவிட்டு மாலை வேளையில் சுண்டல் விற்பதாகக் கூறினர். இதை நீங்கள் எழுதிக் காட்டுங்கள் என்று அந்த அதிகாரிகள் பேப்பரையும் பேனாவையும் நீட்டியபோது, எந்தச் சிறுவனுக்கும் எழுதத் தெரியவில்லை; எந்தப் பள்ளியில் எந்த வகுப்பில் படிக்கிறீர்கள் என்ற கேள்விக்கும் அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. பின்னர் அந்த அதிகாரிகள் இணக்கமாகப் பேசி அவர்களிடம் விசாரித்தபோது, அச்சிறுவர்கள் வறுமை காரணமாக கொத்தடிமைகளாக இந்த வேலையைச் செய்து வருகிறார்கள் என்ற உண்மை வெளிவந்துள்ளது.

இருப்பினும், ''எஜமானரிடமிருந்து மீட்டு எங்களை ஊருக்கு அனுப்பி விடாதீர்கள்; அங்கே ஒருவேளை கஞ்சி குடிக்கக்கூட எங்களுக்கு வழியில்லை; நாங்கள் இங்கே இருந்தால் பட்டினி கிடக்காமல் இருப்போம். எங்கள் பெற்றோருக்கும் காசு அனுப்ப முடியும்'' என்று அவர்கள் அதிகாரிகளிடம் கூறியுள்ளார்கள். அதிகாரிகள் அதன் பிறகு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியவில்லை.

•••

**த**மிழகத்தின் பல பகுதிகளில் இளஞ்சிறுவர்களும் சிறுமிகளும் கொத்தடிமைகளாக உழலும் கொடூரத்திற்கு இருவேறு சாட்சியங்கள்தான் இவை. முன்பெல்லாம் வறுமையில் உழலும் ஒருசில விவசாயக் குடும்பங்கள் பிழைக்க வழியின்றி இப்படி கொத்தடிமைத்தனத்தில் சிக்கிக் கொண்டு அவதிப்படுவதாக நிலைமை இருந்தது. இப்போது அது வேர்விட்டுப் பரவியுள்ளதோடு வறுமையில் உழலும் பெற்றோர்களும் சிறுவர்களும் வேறு வழியின்றி தாமே இக்கொத்தடிமை நுகத்தடியை பூட்டிக் கொள்வதாக நிலைமை மாறிவிட்டது.

அசோக் அகர்வால் என்பவர் தொடுத்த பொதுநல வழக்கின் அடிப்படையில், கடந்த 12.12.05 அன்று உச்சநீதி மன்றத்தின் 3 நீதிபதிகள் கொண்ட குழு மைய அரசுக்கு ஒரு எச்சரிக்கை நோட்டீசு அனுப்பியது. அதில், அரசியல் சட்டத்தின் 21-ஏ பிரிவின்படி 6 முதல் 14 வயது வரையிலான ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டும். குழந்தைத் தொழிலாளர் உழைப்பை முற்றாக ஒழிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியது. ஆனால் 1947-க்குப் பிறகு கடந்த 58 ஆண்டுகளில் குழந்தைத் தொழிலாளர் உழைப்பு முறை ஒழிக்கப்படவில்லை; மாறாக, குழந்தைகள் பள்ளிக்கூடம் செல்லமுடியாமல் கொத்தடிமைகளாக்கப்படும் கொடூரம் தீவிரமடைந்து விட்டது. நாட்டின் 6 முதல்

**தலைநகர் சென்னையிலேயே தலைவிரித்தாடும் குழந்தைத் தொழிலாளர் உழைப்பு முறை.**




படிப்பகம்

www.padippakam.com

14 வயது வரையிலான குழந்தைகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 20 கோடி. இவர்களில் பாதிப்பேர் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல், கூலிகளாகவும், கொத்தடிமைகளாகவும் உழல்வதாக உச்சநீதி மன்றமே ஒப்புக் கொள்கிறது. தற்போதைய சட்டங்கள் தோல்வியடைந்து விட்டதாகவும், குழந்தைகளை உடல் உழைப்பில் ஈடுபடுத்தும் மனித உரிமை மீறல் கேள்வி முறையின்றித் தொடர்வதாகவும் அது குறைபட்டுக் கொள்கிறது.



கடன் தொகையை வட்டியுடன் செலுத்தி, குடியாத்தத்தில் தன்னார்வக் குழுவினரால் கொத்தடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்ட குழந்தைகள்.

நகரங்களை விட கிராமப்புறங்களிலும் சந்தை நகரங்களிலும்தான் குழந்தை உழைப்பு மிக அதிகமாக உள்ளது. மொத்த குழந்தைத் தொழிலாளர்களில் ஏறத்தாழ 85% பேர் கிராமங்களில் விவசாயம்-நெசவு சார்ந்த தொழில்களிலேயே கொத்தடிமைகளாக உழல்கின்றனர். பெரம்பலூர் மாவட்டக் கிராமப்புறங்களில் நிலப்பிரபுக்களின் பண்ணைகளில் சாணி அள்ள, ஆடு-மாடு மேய்க்க, வரப்பு கழிக்க, களையெடுக்க, புல் பிடுங்க என கொத்தடிமைகளாகச் சிறுவர்கள் வதைபடும் அவலம் தொடர்கிறது. சிவகாசியில் தீப்பெட்டி-பட்டாசுத் தொழில்களில் சிறுவர்கள் கொத்தடிமைகளாக உழலும் அவலம் இப்போது வேலூர் மாவட்டம் குடியாத்தத்திலும், தருமபுரி-கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும் தீவிரமாகிவிட்டது. தீப்பெட்டி தொழிலில்தான் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் கொடுமை தொடர்கிறது என்றிருந்த நிலைமைக்குப் பதிலாக அப்பளக் கம்பெனிகள், சோப்புக் கம்பெனிகள், ஆட்டோ பணிமனைகள், டீக்கடைகள், கல்குவாரிகள், அரிசி ஆலைகள், பீடி சுற்றும் கூடங்கள், கம்பளம்-தரைவிரிப்பு நெசவுக் கூடங்கள், பட்டு நெசவுத்தறிகள் என இன்று எல்லாத் தொழில்களிலும் சிறுவர்கள் கொத்தடிமைகளாக உழலும் அவலம் கேள்விமுறையின்றித் தொடர்கிறது. ஏறத்தாழ 20 லட்சம் சிறுவர்கள் உயிருக்கு ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்தப்படுவதாகவும் பலர் பாலியல் வன்முறைக்கு ஆளாவதாகவும் தேசிய மனித உரிமை ஆணையகமே தெரிவிக்கிறது.

ஆந்திராவில் கல்குவாரிகள், கர்நாடகாவில் செங்கற்சூளைகள், மகாராஷ்டிராவில் கடலைமிட்டாய் தொழிற்கூடங்கள் என பிற மாநிலங்களுக்குச் சென்று கொத்தடிமைகளாகித் தவித்த தமிழ்க் குடும்பங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக மீட்டுக் கொண்டு வந்த தன்னார்வக் குழுக்கள், இப்போது தமிழகத்தின் பல பகுதிகளில் கொத்தடிமைத்தனம் தலைவிரித்தாடுவதைக் கண்டு கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றன. காஞ்சிபுரம் பட்டுத்தறிகளிலும் குடியாத்தம் தீப்பெட்டி தொழிற்சாலைகளிலும் கொத்தடிமைகளாக அவதிப்பட்ட சில சிறுவர்-சிறுமிகளை முதலாளியிடம் காசு கொடுத்து மீட்டு, அவர்களுக்கு நோட்டுப்புத்தகம் வாங்கிக் கொடுத்துள்ளன, சில தன்னார்வக் குழுக்கள். ஒரு சிலரை இவ்வாறு காசு கொடுத்து மீட்கலாம். ஆனால், பல்லாயிரக்கணக்கான குழந்தைகளும் அவர்களது பெற்றோரும் இப்படி கொத்தடிமைகளாகச் சிக்கிக் கொண்டு சமுதாயமே இருண்ட காலத்திற்குள் தள்ளப்பட்டுள்ளபோது அவர்களை மீட்க, இத்தகைய வழிமுறைகள் பலன் தருமா?

குழந்தைத் தொழிலாளர் உழைப்பு முறையிலும் கொத்தடிமைத்தனத்திலும் முன்னணியில் நிற்கும் மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் திகழ்கிறது. தமிழகத்தில் 2003-ஆம் ஆண்டில் 70,344 குழந்தைத் தொழிலாளர்கள் இருந்தனர் என்றும், கடுமையான நடவடிக்கைகளால் 2005-ஆம் ஆண்டில் 25,679 பேராகக் குறைந்துள்ளனர் என்றும் தொழிலாளர் துறை ஆணையர் கணக்குக் காட்டுகிறார். இதுவும் நகர்ப்புறங்களிலுள்ள குழந்தைத் தொழிலாளர்களின் மேலோட்டமான கணக்குதான்! கிராமப்புற குழந்தைத் தொழிலாளர்களின் - கொத்தடிமைகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டால் இதைவிட 10 மடங்கு அதிகமாகவே இருக்கும்.

நாடெங்கும் சிறு விவசாயிகள் கடன் சுமையாலும் விவசாய உற்பத்திப் பொருட்களின் விலை வீழ்ச்சியாலும் தற்கொலைக்குத் தள்ளப்படுகிறார்கள். நெசவாளர்களோ வறுமையைப் போக்க வழி தெரியாமல் தங்கள் சிறுநீரகத்தையே விற்கிறார்கள். கூலி-ஏழை விவசாயிகளோ கொத்தடிமைகளாகிப் பரிதவிக்கிறார்கள். நகரங்களில் படித்த இளைஞர்கள் கால்-சென்டர்களில் எவ்வித உரிமையுமின்றி நவீன கொத்தடிமைகளாக உழல்கிறார்கள். தொழிற்சங்க சட்டத்தைத் திருத்தி தொழிலாளர்களை சட்டபூர்வ கொத்தடிமைகளாக்க ஆட்சியாளர்கள் முயற்சித்து வருகின்றனர். பயங்கரவாத "பொடா" சட்டத்துக்கு இணையாக குற்றவியல் சட்டத் தொகுப்பையே மாற்றி எழுத ஆட்சியாளர்கள் கிளம்பியுள்ளனர். ஆட்சியாளர்களாலும் அனைத்து ஓட்டுக் கட்சிகளாலும் பெருமையாகப் பீற்றிக் கொள்ளப்படும் தனியார்மயமும் தாராளமயமும் நாட்டு மக்களுக்கு அளித்துள்ள 'பரிசுகள்'தான் இவை.

இத்தகைய நாட்டுவிரோத - மக்கள்விரோத ஏகாதிபத்திய கொத்தடிமைகள் ஆட்சியதிகாரத்தில் உள்ளவரை நாடெங்கும் பெருகிவரும் குழந்தைத் தொழிலாளர் உழைப்பு முறையையும் கொத்தடிமைத்தனத்தையும் ஒழித்துவிட முடியாது. கருகும் மொட்டுகளாக இளமையைத் தொலைத்துவிட்டு குழந்தைகள் கொத்தடிமைகளாகும் அவலத்தைத் தடுத்து நிறுத்திடவும் முடியாது. இந்த அவமானங்களுக்கும் கொடுமைகளுக்கும் காரணமான தனியார்மய - தாராளமயக் கொள்கைகளையும் அவற்றைத் தீவிரமாகச் செயல்படுத்தி வரும் பாசிச ஆட்சியாளர்களையும் எதிர்த்துப் போராடுவதா? அல்லது அந்த அவலங்களைக் கண்டு வேதனையில் புலம்பிக் கொண்டிருப்பதா? - தன்மானமுள்ள ஒவ்வொரு தமிழனையும் உலுக்கும் கேள்விகள்தான் இவை.

● தனபால்


படிப்பகம்

# மனித உரிமைகளை மறுக்கும் உலகமயமாக்கம்

உழைக்கும் மக்களின் வாழ்வுரிமைக்காகப் போராடுவது, பொதுக்கூட்டங்கள் - ஊர்வலங்கள் - மறியல் நடத்துவது, தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது - இப்படி இதுநாள் வரை அரசியல் சாசனத்தில் இருந்துவந்த சட்டபூர்வ ஜனநாயக உரிமைகளை அடுத்தடுத்து நீதிமன்றம் சட்டவிரோதனமானதாக அறிவித்து வருகிறது. இத்தீர்ப்புகள் ஒருபுறமிருக்க, இந்தியக் குற்றவியல் சட்டத் தொகுப்பையே ''பொடா''விற்கு இணையாகத் திருத்தி எழுதும் முயற்சியில் மைய அரசு ஏற்கெனவே இறங்கி விட்டது. தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் திணிக்கப்படும் மறுகாலனியாக்கத்துக்கு ஏற்றவாறு சட்டபூர்வ பாசிச கொடுங்கோலாட்சி படிப்படியாக அரங்கேறி வருவதையே இவையனைத்தும் நிரூபித்துக் காட்டுகின்றன.

படர்ந்துவரும் இப்பாசிசப் பேரபாயத்தை உழைக்கும் மக்களுக்கு உணர்த்தும் வகையில், மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் (HRPC) கடலூர் கிளை, 3.6.06 அன்று மாலை விருத்தாசலம் இளங்கோ நினைவு அரங்கில் (மக்கள் மன்றம்) ''உலகமயம் - தனியார்மயம் - தாராளமயம்: நமது வாழ்க்கையைச் சூறையாடும் சுனாமிகள்'' எனும் தலைப்பில் கருத்தரங்கை நடத்தியது.

இக்கருத்தரங்கில் ''உலகமயமாக்கலுக்காக நமது நாட்டின் இறையாண்மையைக் காவு கொடுக்கும் புதிய சட்டங்களும் புதிய தீர்ப்புகளும்'' என்ற தலைப்பில் பெங்களூர் உயர் நீதிமன்ற வழக்குரைஞர் தோழர் பாலன் சிறப்புரையாற்றினார். பன்னாட்டுக் கம்பெனிகளின் பகற்கொள்ளைக்காக சிறுவியாபாரிகள் நசுக்கப்படுவதையும், இதற்கேற்ப சட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதையும், இதற்கெதிராக வழக்கு தொடுத்தால் அது செல்லுபடியாகாது என்று நீதிமன்றம் புதிய தீர்ப்பு வழங்குவதையும், வாழ்வைச் சூறையாடும் உலகமயமாக்கலுக்கு எதிராக உழைக்கும் மக்கள் போராட வேண்டிய அவசியத்தையும், மக்கள் போராட்டங்களால் நேபாளத்தில் மன்னராட்சி வீழ்த்தப்பட்ட முன்னுதாரணத்தையும் விளக்கிய அவர், மனித உரிமை பாதுகாப்பு மையம் மற்றும் புதிய ஜனநாயக புரட்சிகர அமைப்புகளில் இணைந்து போராட அறைகூவினார்.

''உலகமயமாக்கலால் சூறையாடப்படும் விவசாயிகள் - தொழிலாளர்கள் - இளைஞர்களின் வாழ்க்கையை காஸ் ஸ்டவ்வும் கலர் டி.வி.யும் கரை சேர்க்குமா?'' என்ற தலைப்பில் உரையாற்றிய பு.ஜ.தொ.மு. பொதுச் செயலாளர் தோழர் சுப.தங்கராசு, தொழிற்சங்க உரிமையும் பணிப்பாதுகாப்பும் பறிக்கப்பட்டு தொழிலாளர்கள் வீதியில் வீசியெறியப்படுவதையும், விவசாயிகள் கடன் சுமையால் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போகும் அவலத்தையும், எவ்வித உரிமையுமின்றி கால்சென்டர் - பி.பி.ஓ.க்களில் படித்த இளைஞர்கள் நவீன கொத்தடிமைகளாக்கப்பட்டுள்ளதையும், குமுறிக் கொண்டிருக்கும் மக்களை இலவச-கவர்ச்சித் திட்டங்களைக் காட்டி ஆட்சியாளர்கள் ஏய்த்து வருவதையும், மறுகாலனிய தாக்குதலுக்கு எதிராக புரட்சிகர அமைப்புகளில் அணிதிரண்டு போராட வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தார்.



ஏறத்தாழ 200-க்கும் மேற்பட்டோர் திரண்டு வந்து சிறப்பித்த இக்கருத்தரங்கத்தின் இறுதியில், 40 பேர் தங்களை மனித உரிமை பாதுகாப்பு மையத்தில் உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டு உலகமயமாக்கலுக்கு எதிராகப் போராட உறுதியேற்றனர்.

*- ம.உ.பா. மையம்,*
*கடலூர் மாவட்டக் கிளை.*

# அரசுப் பள்ளிகளில் கட்டாய நன்கொடை கொள்ளை!

## புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம்- போராட்டம்

தமிழகமெங்கும் எல்லா அரசுப் பள்ளிகளிலும் நன்கொடை என்ற பெயரில் பெற்றோர்-ஆசிரியர் கழகம், கட்டாய வசூல் வேட்டையை நடத்தி வருகிறது. இச்சட்ட விரோதப் பகற்கொள்ளைக்கு எதிராக தருமபுரி மாவட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி தாங்கள் செயல்படும் பகுதிகளில் துண்டுப் பிரசுரம், தட்டிகள், தெருமுனைக் கூட்டங்கள் மூலம் வீச்சான பிரச்சாரத்தை நடத்தி வந்தது. இந்நிலையில் தருமபுரி அருகே நடுப்பட்டியை அடுத்துள்ள சோளக்கொட்டாய் கிராம மேல்நிலைப் பள்ளியில் 6-ஆம் வகுப்பிலும் +1 வகுப்பிலும் சேரும் மாணவர்கள் ரூ. 500 தரவேண்டும் என்றும் இதர மாணவர்கள் ரூ. 300 செலுத்த வேண்டும் என்று பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் சார்பில் பள்ளி நிர்வாகம் அறிவித்தது. இக்கட்டாய நன்கொடைக் கொள்ளையை எதிர்த்து இப்பகுதியெங்கும் சுவரொட்டி பிரச்சாரத்தை மேற்கொண்ட வி.வி.மு. தோழர்கள், பெற்றோர்-ஆசிரியர் கழக கூட்டத்தில் கலந்து கொண்டு இச்சட்டவிரோத கட்டாய நன்கொடைக்கு எதிராகக் கேள்வி எழுப்பினர்.

தலைமையாசிரியரோ, பள்ளிக்கூடத்திற்கு பெஞ்சுகள், கரும்பலகைகள் வாங்குவதற்காகவே இவ்வாறு நன்கொடை கேட்கிறோம் என்று நியாயப்படுத்தினார். பெஞ்சு வாங்க ஏழை மாணவர்களிடம் கட்டாய நன்கொடை கேட்கும் நீங்கள், சம்பளம் - பென்ஷனுக்கு அரசாங்கத்திடம் போராடுகிறீர்களே, ஏன்? உலக வங்கி உத்தரவால் கல்விக்கான மானியம் வெட்டப்பட்டதாலேயே பெஞ்சுகளும் கரும்பலகைகளும் பற்றாக்குறையாக உள்ளன. இதற்கெதிராகப் போராடுவதை விடுத்து, ஏழைகளிடம் பகற்கொள்ளையடிப்பது என்ன நியாயம்? என்று தோழர்கள் கேள்வி எழுப்பியதை பெற்றோர்-ஆசிரியர் கழக கூட்டத்தில் பங்கேற்ற உழைக்கும் மக்கள் உற்சாகமாக வரவேற்று ஆதரித்தனர். பெற்றோர்-ஆசிரியர் கழகம் என்ற பெயரில் பொறுக்கித் தின்னும் சர்வகட்சி கும்பல் இதனால் பீதியடைந்து,


படிப்பகம்

www.padippakam.com

இங்கு அரசியல் பேசக்கூடாது என்று கூச்சலிட்டு கூட்டத்தை ரத்து செய்துவிட்டு, பின்னர் நன்கொடை வசூலிக்க ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகத் தன்னிச்சையாக அறிவித்தது.

இதை அம்பலப்படுத்தி மக்களிடம் பிரச்சாரம் செய்த தோழர்கள், "இலவசக் கல்வி நமது அடிப்படை உரிமை; யாரும் நன்கொடை கொடுக்காதீர்கள்" என்று எச்சரித்தனர். அதன் விளைவாக, இக்கிராமத்தைச் சேர்ந்த பெரும்பான்மையான மாணவர்களும், அவர்களது பெற்றோரும் கட்டாய நன்கொடை தர முடியாது என்று உறுதியாக பள்ளி நிர்வாகத்திடம் அறிவித்து விட்டனர். பெற்றோர்-ஆசிரியர் கழகம் என்ற கொள்ளைக் கூட்டத்தின் அச்சுறுத்தல் அரட்டல்-மிரட்டல்களைத் துச்சமாக மதித்துக் கட்டாய நன்கொடை ஏதுமின்றி மாணவர்கள் இப்பள்ளியில் சேர்க்கப்பட்ட செய்தி, சுற்றுப்புற கிராமங்களுக்குப் பரவி அக்கிராம மக்கள் தங்கள் பகுதியிலும் வி.வி.மு கிளை தொடங்க ஆர்வத்தோடு கோரி வருகின்றனர்.

இதேபோல், பென்னாகரம் வட்டத்திலுள்ள பி.அக்ரஹாரம் கிராமத்தின் மேல்நிலைப் பள்ளியில் கட்டாய நன்கொடை வசூலிக்கப்படுவதை எதிர்த்து வி.வி.மு. சுவரொட்டி பிரச்சாரம் செய்ததோடு, மாணவர்களை நேரிலும் சந்தித்து விளக்கியது. பீதியடைந்த தலைமையாசிரியரோ இது கட்டாய நன்கொடை அல்ல; விருப்ப நன்கொடைதான் என்று மாணவர்களிடம் பூசி மெழுகினார். மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்து போராட்டத்தில் இறங்கினர். சில ஆசிரியர்களும் நியாயமான இப்போராட்டத்தை ஆதரித்து வகுப்புகளைப் புறக்கணித்தனர். இதைத் தொடர்ந்து மாவட்ட கல்வி அதிகாரி விசாரணை நடத்தி வருகிறார். நன்கொடை என்ற பெயரில் பெற்றோர்-ஆசிரியர் கழகம் நடத்திவரும் பகற்கொள்ளைக்கு எதிரான பிரச்சாரமும் போராட்டமும் இப்பகுதிவாழ் உழைக்கும் மக்களிடம் வி.வி.மு. மீது புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

அரசுப் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு மற்றும் +1 வகுப்பில் சேர்க்கப்படும் மாணவர்களிடம் பெற்றோர்-ஆசிரியர் கழகம் என்ற பெயரில் சர்வகட்சி பொறுக்கிக் கும்பல் கட்டாய வசூல்வேட்டை நடத்துவதை எதிர்த்தும் இலவசக் கல்வி மக்களின் அடிப்படை உரிமை என்பதை வலியுறுத்தியும் ஈரோடு மாவட்ட புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி பள்ளிபாளையம் - ஆவரங்காட்டில் 4.6.06 அன்று கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. திரளாக பள்ளி மாணவர்களும் பெற்றோர்களும் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டம் பகுதிவாழ் மக்களிடம் சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றது.

-பு.ஜ. செய்தியாளர்கள்.

# பெற்ற மகனை கொன்று எரித்த கொடூரம்! சி.பி.எம்.காரனின் சாதிவெறியாட்டம்!!

தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளியை அடுத்துள்ள பூதலூர் ஒன்றியத்தைச் சேர்ந்த மாரனேரி என்கிற கிராமத்தில் சுப்ரமணியன் என்ற சாதிவெறி பிடித்த மிருகம், தனது மகனையே கொன்று எரித்துள்ளது. இந்த மிருகம் ஆதிக்க சாதிகாரன் என்றோ, பெரும்பணக்காரன் அல்லது பண்ணையார் என்றோ கருதிவிட வேண்டாம். 20 ஆண்டுகளாக சி.பி.எம். கட்சியில் 'தீவிரமாக' செயல்பட்டு வருபவர். தாழ்த்தப்பட்ட சாதியான பள்ளர் பிரிவை சார்ந்த, நிலம் ஏதும் இல்லாத கூலித் தொழிலாளி. இன்று வரை ஆதிக்கசாதியான உடையார் சாதிக்காரரான மகிமைராசு என்பவரிடம் பண்ணை வேலை செய்து வருபவர்தான் சுப்ரமணியன்.

சுப்ரமணியன் தனது மகனை கொலை செய்து எரிப்பதற்கான காரணம், தனது மகன் முருகராஜ், தாழ்த்தப்பட்ட சாதியின் மற்றொரு பிரிவான பறையர் வீட்டு பெண்ணான சித்ரா என்பவரை காதலித்து திருமணம் செய்து கொள்ள முடிவு செய்ததுதான். முருகராஜும், சித்ராவும் 6 ஆண்டுகளுக்கு முன்பு காதலித்து வந்துள்ளனர். அதனடிப்படையில் சித்ரா 8 மாத கர்ப்பிணியாகி விட்டார். ஊருக்குத் தெரியும் முன்பே எங்கேயாவது சென்று திருமணம் செய்து கொள்ள இருவரும் முடிவெடுத்தனர். இதையறிந்து, அப்போது சி.பி.எம். கட்சியின் விவசாய தொழிலாளர் சங்கத்தின் பூதலூர் ஒன்றிய தலைவராக இருந்த கொலைகார சுப்ரமணியன் "மாட்டுகறி திங்கிற பறச்சி எனக்கு மருமவளா வரமுடியாது" என வெளிப்படையாக கூச்சல் போட்டுள்ளார். தனது மகன் முருகராஜை மிரட்டி கடத்தி சென்று உறவினர் வீட்டில் பதுக்கி வைத்துவிட்டார். இதனால் வெளியூர் ஓடிப்போய் திருமணம் செய்து கொள்வது என்கிற இருவரது ஆசையும் நிராசையானது.

இந்நிலையில் கர்ப்பிணியான சித்ரா, வீட்டில் உள்ளவர்களின் கடும் பேச்சுக்கு ஆட்பட்டு அவமானத்தால் என்ன செய்வது என்று அறியாமல் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டார். மகனை கடத்தி பதுக்கி விட்டாலும் சித்ரா கர்ப்பமாக இருப்பது சுப்ரமணியனுக்கு அச்சுறுத்தலாக இருந்தது. உடனே ஆல்பர்ட் என்கிற இன்னொரு சி.பி.எம்.காரனிடம் ரூ. 500/- கொடுத்து சித்ராவின் வயிற்றில் வளரும் கருவை கலைக்கக் கூறினான். ஆல்பர்ட்டும் சித்ராவிடம் நைச்சியமாக பேசி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளான். சித்ரா வயிற்றில் இருப்பது 8 மாத குழந்தை என்பதால் கலைக்க முடியாது என மருத்துவர்கள் கூறிவிட்டனர். ஆகவே, சுப்ரமணியனின் முயற்சி தோல்வியானது.

இதற்கிடையில் அவ்வூர்காரர்களான - தலித் அரசியல் ஆர்வலரான திரு. ராஜேந்திரன், வி.வி.மு. தோழர் ஆண்ட்ரோஸ் ஆகிய இருவரும் இப்பிரச்சினை தொடர்பாக சுப்ரமணியனிடம் பேசி திருமணம் செய்து வைக்க முயற்சி செய்தனர். அதற்கு மறுத்துவிட சுப்ரமணியன், இப்பிரச்சினையில் தலையிட்டால் "கொலை செய்து விடுவேன்" என மிரட்டவும் செய்தார். இந்நிலையில் விவசாய தொழிலாளர் சங்கத்தின் பூதலூர் ஒன்றிய பேரவை கூட்டம் சுப்ரமணியன் தலைமையில் நடந்தது. இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக தஞ்சை சி.பி.எம். மாவட்ட செயலாளராக அப்போது இருந்த சீனிவாசன் என்பவர் வந்திருந்தார்.

அக்கூட்டத்திற்குள் சித்ராவை அழைத்துக் கொண்டு சென்ற ம.க.இ.க. - பு.மா.இ.மு. தோழர்கள் மற்றும் ஊர்ப் பொதுமக்கள் சிலர், இப்பெண்ணிற்கு ஏற்பட்ட பிரச்சினையை எடுத்துக் கூறி, இக்கூட்டத்திலேயே விசாரித்து நியாயம் வழங்க வேண்டும் என வலியுறுத்தினர். திருடனுக்கு தேள்கொட்டிய கதையாக முழித்தார் சுப்ரமணியன். சி.பி.எம். மாவட்டச் செயலாளர், "ஒரு வாரம் கால அவகாசம் கொடுங்கள்; நான் தீர விசாரித்து நல்ல முடிவினை கூறுகிறேன். என்னை நம்புங்கள்" என்றார். சி.பி.எம். மாவட்ட செயலாளரின் பேச்சும், உறுதியும் அனைத்தும் நயவஞ்சகம், ஏமாற்று, சுப்ரமணியனைக் காப்பாற்ற எடுத்த முயற்சி என்பது பிறகுதான் தெரிய வந்தது. ஒருவாரம், பின் 10 நாட்கள் என அவகாசம் கேட்ட சீனிவாசன், "சுப்ரமணியனை கட்சியிலிருந்து நீக்கி விட்டோம், எங்களுக்கும் அவருக்கும் எவ்விதத் தொடர்பும்


படிப்பகம்

www.padippakam.com

இல்லை. இப்பிரச்சினையில் நாங்கள் தலையிட முடியாது'' எனக் கூறி நழுவிக் கொண்டார்.

அட்டூழியங்களில் ஈடுபட்டு அம்பலமாகும் போலீசை இட மாறுதல் அளித்தோ, தற்காலிக பணி நீக்கம் செய்தோ காப்பாற்றும் போலீசு துறையை போலவே, தேர்ந்த திறமையுடன் சுப்ரமணியனை காப்பாற்றியது சி.பி.எம். கட்சி. அக்கட்சிகாரர்கள் பல வகையில் சுப்ரமணியனுக்கு உதவியாக செயல்பட்டனர். கட்சிக்கு இது தெரிந்தே நடந்தது.

சித்ராவை சுப்ரமணியனின் வீட்டிற்கே அழைத்துச் சென்று 17.01.2001 அன்று நியாயம் கேட்ட ம.க.இ.க. - வி.வி.மு. தோழர்களை சுப்ரமணியனுடன் சேர்ந்து கொண்டு தாக்க வந்தான் மெய்யழகன் என்ற சி.பி.எம்.காரன். பின்னர், சித்ரா கொடுத்த புகாரின்படி கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த சுப்ரமணியன், அவரது மனைவி இருவரையும் பிணையில் எடுக்க முயற்சி செய்தார் சி.பி.எம். கட்சியின் வழக்கறிஞர் ஒருவர். பிணையில் வந்த சுப்ரமணியன் கட்சி வேலைகள் செய்ய அனுமதிக்கப்பட்டார். ஒரு சில மாதங்களுக்குப் பிறகு கட்சியில் அதே தகுதியில் சேர்த்துக் கொள்ளவும் பட்டார். பூதலூர் வட்டாரத்தில் சி.பி.எம். கட்சி நடத்திய பல்வேறு பொதுக்கூட்ட - பொது நிகழ்ச்சிகளின் துண்டு பிரசுரங்களே இதற்குச் சாட்சியமாக உள்ளது.

சாதாரண கூலி ஏழையான, இன்னமும் பண்ணை வேலை செய்யும் சுப்ரமணியனுக்கு தனது மகனையே கொலை செய்யும் துணிச்சல் ஏற்பட்டதற்கு சாதி வெறியே அடிப்படை என்றாலும், சி.பி.எம். கட்சிக்காரர்களின் சாதிவெறி ஆதரவு செயல்பாடும், சி.பி.எம். கட்சியின் சந்தர்ப்பவாதமும் முக்கிய காரணமாகும். சி.பி.எம். உண்மையாக, நேர்மையாக இவ்விசயத்தில் நடந்து கொண்டிருந்தால், சித்ரா-முருகராஜ் இருவரும் திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து இருப்பர். அது நடைபெறாமல் போய்விட்டது.

கர்ப்பமடைந்த சித்ராவிற்கு 2000-மாவது ஆண்டின் இறுதியில் ஆண் குழந்தை பிறந்தது. முருகராஜை திருமணம் செய்து கொள்ள உத்தரவிட வேண்டும் என்றும் இதற்கு தடையாக இருக்கும் சுப்ரமணியன், அவரது உறவினர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் போலீசிடம் புகார் கொடுக்கப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டு இருந்தது. வழக்கு விசாரணையின்போதே



**சி.பி.எம்.இன் சாதிவெறிக்குக் கணவனைப் பறிகொடுத்துவிட்டு தவிக்கும் சித்ரா-தனது குழந்தையுடன்.**

வேறொரு பெண்ணை முருகராஜ்-க்கு கட்டாயத் திருமணம் செய்து வைத்தார் சுப்ரமணியன். அப்பெண் மேற்கண்ட பிரச்சினை தெரிந்து வாழாமல் சென்றுவிட்டார். பூதலூரில், 2002-ஆம் ஆண்டில் சி.பி.எம். கட்சியின் வி.தொ. சங்க மாவட்ட மாநாடு நடந்தபோது, சி.பி.எம். கட்சியின் சாதிவெறியையும், சுப்பிரமணியனின் அடாவடித்தனங்களை அம்பலப்படுத்தியும் வி.வி.மு. தோழர்கள் சுவரொட்டி பிரச்சாரம் செய்தனர். அதன்பிறகும்கூட வி.தொ. சங்க மாநிலத் தலைவரான வீரையன், சப்பிரமணியனை அவரது வீட்டிற்கே சென்று சந்தித்துப் பேசியுள்ளார். இதற்கிடையில், சித்ராவைக் காதலித்ததை ஒப்புக் கொண்டும் அவளையே திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்தும் எழுத்துப்பூர்வமாக - நீதிமன்றத்தில் ஒப்புதல் அளித்தார் முருகராஜ். பின்னர் முருகராஜ் ஊருக்குத் திரும்பிவந்து, பெற்றோருடன் உறவை முறித்துக் கொண்டு, சித்ராவுடன் தனியே குடும்பத்தை நடத்தி வந்தார். முருகராஜ் ஒப்புதல்படி 16.6.06-இல் இருவருக்கும் திருமணம் செய்து வைக்க நீதிமன்றம் முடிவு செய்திருந்தது.

இந்நிலையில், 12.6.06 அன்று இரவே, ஆல்பர்ட், சேட்டு என்கிற மாரிமுத்து ஆகிய இரண்டு சி.பி.எம். காரன்களை துணையாகக் கொண்டு, தனியாக சென்றுக் கொண்டிருந்த முருகராஜை கொலை செய்து வைக்கோல் போரில் வைத்து எரித்து விட்டான் சுப்ரமணியன். எதிர்பாராத விதமாக மழை பலமாக பெய்ததால் பாதி எரிந்த நிலையில் உடல் கிடந்தது. வேறு வழி தெரியாமல் புதரில் உடலை தூக்கியெறிந்துவிட்டு வீட்டிற்கு வந்து விட்டனர், போலி கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த மூன்று அயோக்கியர்களும்.

கொலைக் குற்றத்திலிருந்து தப்பிக்கும் வகையில், சித்ராவிற்கு உறுதுணையாக நின்ற திரு.ராஜேந்திரன் உட்பட மூவர் மீது பொய்யாக புகார் கொடுத்து நாடகமாடினான் சுப்ரமணியன். முதற்கட்ட விசாரணையிலேயே சுப்ரமணியன்தான் கொலையாளி என்பது அம்பலமானது. திருகாட்டுப்பள்ளியில் கட்சிக்காரர் ஒருவரின் திருமணத்திற்கு வந்திருந்த விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநில தலைவர் கோ.வீரையன் தகவல் தெரிந்து மாரனேரி வந்துள்ளார். அவரிடம் சுப்ரமணியன் கொலை செய்ததற்கான ஆதாரங்களை அடுக்கி, ''சி.பி.எம். கட்சிக்காரர் என்று குறிப்பிடாமல் கொலை வழக்கைப் பதிவு செய்துள்ளோம். உங்கள் கட்சியைக் காப்பாற்ற இதற்குமேல் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது'' என்று கூறியுள்ளது போலீசு. வேறெதுவும் பேசாமல் வந்த வழியிலேயே திரும்பிவிட்டார் கோ.வீரையன்.

சுப்ரமணியன்தான் கொலை செய்தார் என அம்பலபட்டுள்ள போதிலும், சி.பி.எம். கட்சிக்காரர்கள் சுப்ரமணியனைப் பாதுகாக்க முயற்சிப்பதை நிறுத்தவில்லை. சுப்ரமணியனுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தமது கட்சியின் சாதி வெறியர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூட சி.பி.எம். முன்வரவில்லை. சுப்பிரமணியன் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட மூன்றாவது நபர் என்று கூறிக் கொண்டு, கணவனைப் பறிகொடுத்துவிட்டு நிற்கும் சித்ராவுக்கு நியாயம் கிடைக்க சட்டரீதியாகப் போராடக்கூட முன்வராமல் அக்கட்சித் தலைவர்கள் நழுவிக் கொள்கின்றனர்.

பூதலூர் வட்டாரத்தில் சி.பி.எம். கட்சியில் செயல்பட்டு, தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் மட்டுமின்றி உழைக்கும் மக்களிடம் நீங்காத இடம் பெற்றவர் தோழர் வெங்கடாச்சலம். இவர் ஆதிக்க சாதியில் பிறந்திருந்தாலும், அச்சாதிவெறிக்கு எதிராக போர்குணத்துடன் செயல்பட்டவர். அதனால் சாதிவெறியர்களாலேயே கொலை செய்யப்பட்டு தியாகியானார். இன்னமும் இத்தியாகியின் பெயரை கூறியே அப்பகுதியில் கட்சியை தக்க வைத்துக் கொண்டுள்ள சி.பி.எம்., சாதிவெறியர்களின் கூடாரமாக மாறிவிட்டது என்பதையும், தலித் மக்களிடம் கூட பார்ப்பனியம் எவ்வளவு ஆழமாக வேரூன்றியுள்ளது என்பதையும் அம்பலப்படுத்தியுள்ளது முருகராஜின் கொலை!

**- ம.க.இ.க.-பு.மா.இ.மு.-வி.வி.மு., தஞ்சை.**

www.padippakam.com

# அமெரிக்க – இஸ்ரேலிய பயங்கரவாதம்:

# பட்டினியில் பரிதவிக்கும் பாலஸ்தீனம்

கடந்த 58 ஆண்டுகளாக தமது சொந்த மண்ணை இழந்து கொடுந்துயரங்களை அனுபவித்து வரும் பாலஸ்தீன மக்கள் இன்று பேரழிவின் விளிம்பில் நிற்கிறார்கள். உண்ண உணவில்லை; குழந்தைகளுக்குப் பால் இல்லை; மருத்துவமனைகளில் மருந்து இல்லை; ஊழியர்களுக்குச் சம்பளம் இல்லை; தாங்கள் உழுது பயிரிட்டு விளைவித்த காய்கறிகளையும் கனிகளையும் சந்தைக்குக் கொண்டு செல்ல அனுமதியுமில்லை. திறந்தவெளிச் சிறைச்சாலையில் பட்டினியால் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள் பாலஸ்தீன மக்கள்.

இது ஏதோ இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட கோரமல்ல; ஜனநாயகம் பேசும் நாகரிக உலகின் ஏகாதிபத்திய வாதிகள் பாலஸ்தீன மக்களுக்கு விதித்துள்ள தண்டனைதான் இது!

ஏன் இப்படி ஏகாதிபத்தியவாதிகள் பாலஸ்தீன மக்களைப் பட்டினி போட்டுக் கொல்ல வேண்டும்? பாலஸ்தீன மக்கள் அப்படி என்ன குற்றத்தைச் செய்து விட்டார்கள்?

கடந்த ஜனவரி மாதத்தில் பாலஸ்தீன அதிகார அமைப்புக்கு உட்பட்ட பகுதிகளில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பாலஸ்தீன மக்கள் ''ஹமாஸ்'' இயக்கத்தின் வேட்பாளர்களுக்குப் பெருவாரியாக வாக்களித்து வெற்றி பெறச் செய்துவிட்டார்கள். ஹமாஸ் இயக்கம் பாலஸ்தீன அதிகார அமைப்புக்கு உட்பட்ட பகுதிகளில் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டது. இதுதான் பாலஸ்தீன மக்கள் செய்த 'குற்றம்'! தாங்கள் விரும்பும் கட்சியைப் பாலஸ்தீன மக்கள் ஆட்சியில் அமர்த்துவது எப்படி குற்றமாகும் என்று உங்களுக்குச் சந்தேகம் எழலாம். ''ஆம்! குற்றம்தான்! ஏனெனில் ஹமாஸ், இசுலாமிய அடிப்படைவாத பயங்கரவாத இயக்கம்'' என்று குற்றம் சாட்டுகின்றனர் ஏகாதிபத்தியவாதிகள்.

பாலஸ்தீனத்தில் நடந்த தேர்தலில் ஹமாஸ் இயக்கம் வெற்றி பெற்ற மறுநிமிடமே இனவெறி பிடித்த பயங்கரவாத இஸ்ரேலிய அரசு பாலஸ்தீன அதிகார அமைப்புடனான அரசியல் - பொருளாதாரத் தொடர்புகள் அனைத்தையும் துண்டித்துக் கொண்டது. இஸ்ரேலின் கூட்டாளியும் உலக மேலாதிக்கப் பயங்கரவாதியுமான அமெரிக்கா, ஹமாஸ் தலைமையிலான பாலஸ்தீன ஆட்சியைப் புறக்கணிக்குமாறு உலக நாடுகளுக்குப் பகிரங்கமாக அறிவித்தது. அதைத் தொடர்ந்து, அமெரிக்காவை அடியொற்றிச் செல்லும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் ஹமாஸ் ஆட்சியைப் புறக்கணிப்பதாக அறிவித்து பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளன.

பாலஸ்தீன மக்களிடமிருந்து இஸ்ரேலிய அரசு சுங்கவரிகளையும் இதர வரிகளையும் வசூலித்து வருகிறது. பாலஸ்தீன அரசு நிர்வாகத்தை நடத்துவதற்கு இந்த வரிகளால் கிடைக்கும் நிதிதான் முக்கிய ஆதாரமாக உள்ளது. இதோடு வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நிதியுதவிகளைக் கொண்டுதான் பாலஸ்தீன அரசு தனது பொருளாதாரத் தேவைகளை அரைகுறையாக ஈடு செய்து வந்தது.

இப்போது பாலஸ்தீனத்தில் ஹமாஸ் இயக்கம் ஆட்சியைக் கைப்பற்றியதும், பாலஸ்தீன மக்களின் சொந்த வரிப்பணத்தையே பாலஸ்தீன அரசுக்குத் தர முடியாது என்று அடாவடித்தனம் செய்கிறது இஸ்ரேலிய அரசு. இதுதவிர, பாலஸ்தீன அதிகார அமைப்புக்குச் சேரவேண்டிய வெளிநாட்டு நிதியுதவிகளும் அமெரிக்க-இசுரேலிய அரசுகளால் முடக்கப்பட்டுள்ளன. அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் இன்னும் ஒருபடி மேலே சென்று, பாலஸ்தீன அதிகார அமைப்பின் அமெரிக்க வங்கிக் கணக்குகள் அனைத்தையும் முடக்கி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதன் விளைவாக, வறுமையிலும் பட்டினியிலும் பாலஸ்தீனம் பரிதவிக்கிறது. இன்று பாலஸ்தீன மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகள் கூட இல்லை. ஏறத்தாழ 1,60,000 அரசு ஊழியர்களுக்குப் பல மாதங்களாக சம்பளம் கொடுக்க முடியவில்லை. ஏறத்தாழ 12 லட்சம் பாலஸ்தீன மக்கள் பட்டினிச் சாவின் விளிம்பில் நிற்பதாக ஐ.நா. மன்றமே ஒப்புக் கொண்டுள்ளது. கடந்த ஜனவரி முதல் பாலஸ்தீன அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதிகளுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை

காசாமுனை கடற்கரையில் கூடியிருந்த பாலஸ்தீன மக்கள் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டோரின் உறவினர்கள் கதறியழும் வேதனை.




படிப்பகம்

www.padippakam.com

ஏற்றிச் செல்லும் சரக்கு வண்டிகளைத் தடுத்து இஸ்ரேலிய அரசு தொடர்ந்து அடாவடித்தனம் செய்து வருகிறது. இப்போது எரிபொருள், குடிநீர் விநியோகத்தையும் நிறுத்தப் போவதாக அச்சுறுத்துகிறது.

இதுமட்டுமின்றி, கடந்த 4 மாதங்களில் பாலஸ்தீன பகுதிகளின் மீது இஸ்ரேலிய இராணுவம் 38 முறை திடீர் தாக்குதல்களை நடத்தி 9 பேரைக் கொன்று பலரைப் படுகாயப்படுத்தியுள்ளது. 70-க்கும் மேற்பட்டோரைப் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டதாகப் பொய்க்குற்றம் சாட்டி சிறையில் அடைத்துள்ளது. பாலஸ்தீன மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாலஸ்தீன பகுதியில் சுதந்திரமாக நடமாடக் கூட முடியவில்லை. பலமுறை அவர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். இஸ்ரேலிய இனவெறி பயங்கரவாத அரசு தனது கொலைப் பட்டியலில் பாலஸ்தீன பிரதமர் இசுமாயில் ஹனியேவையும் சில ஹமாஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துள்ளதோடு, அதனைப் பகிரங்கமாகவும் அறிவித்துள்ளது.

ஈராக்கில் ஜனநாயகத்தை நிலைநாட்டப் போவதாகப் பீற்றிக் கொள்ளும் பயங்கரவாத அமெரிக்க வல்லரசு, பாலஸ்தீனத்தில் நேர்மையாக நடந்த ஒரு ஜனநாயகத் தேர்தலையே ஏற்க மறுத்து, "ஐயோ, பயங்கரவாதிகள் ஆட்சிக்கு வந்து விட்டார்கள்" என்று ஊளையிடுகிறது. ஐ.நா. மன்றத்தின் மேற்பார்வையில் நடந்த பாலஸ்தீன தேர்தலைக் கண்காணித்தவர்களில் முன்னாள் அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டரும் ஒருவர். "நேர்மையான முறையில் நியாயமாகவும் அமைதியாகவும் பாலஸ்தீன தேர்தல் நடைபெற்றது" என்று அவர் நற்சான்றிதழ் கொடுத்துள்ளார். ஆனாலும் இத்தேர்தல் முடிவை ஏற்க மறுக்கின்றனர், அமெரிக்க-இஸ்ரேலிய பயங்கரவாதிகள். ஒரு பயங்கரவாத இயக்கம் ஆட்சிக்கு வந்திருப்பதை ஜனநாயக உலகம் எப்படி அங்கீகரிக்க முடியும் என்று இப்பயங்கரவாதிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஹமாஸ் இயக்கம் இசுலாமிய அடிப்படைவாத சித்தாந்தமும் பயங்கரவாத வழிமுறையும் கொண்ட அமைப்புதான். அதற்காக பாலஸ்தீன மக்களைப் பட்டினி போட்டு தண்டிப்பது எந்த வகையில் நியாயமாகும்? மௌனமாக நடக்கும் இப்படுகொலைக்கு எதிராக வாய்திறக்காமல் இருப்பது எப்படி ஜனநாயகமாகும்? ஏகாதிபத்திய காட்டுமிராண்டி உலகம் கிடக்கட்டும்; இசுலாமிய நாடுகள் கூட தமது பாலஸ்தீன இசுலாமிய சகோதரர்கள் பட்டினி போட்டுக் கொல்லப்படும் போது வாய் மூடிக் கிடக்கின்றன. வளைகுடா கூட்டுறவுக்கு (GCC) நாடுகளான பல அரபு நாடுகள் அமெரிக்காவின் அச்சுறுத்தலுக்குப் பணிந்து பாலஸ்தீன ஹமாஸ் அரசாங்கத்தைப் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளன. உதவி கோரி வந்த பாலஸ்தீன.வெளியுறவு அமைச்சரை எகிப்து நாட்டின் வெளியுறவு அமைச்சர் சந்திக்க மறுத்துள்ளார். பாலஸ்தீன குழந்தைகளைக் காப்பாற்றக் கோரி ஜோர்டான் சென்ற பாலஸ்தீன அமைச்சருடன் ஜோர்டான் மன்னர் பேச மறுத்துவிட்டார்.



**இஸ்ரேல் அரசின் கொலைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள பாலஸ்தீன பிரதமர் இசுமாயில் ஹனியே.**

நாமெல்லோரும் அல்லாவின் குழந்தைகள்; உலகெங்குமுள்ள இசுலாமியர்கள் அனைவரும் நமது சகோதரர்கள் என்றெல்லாம் மதவெறியர்கள் உபதேசம் செய்யலாம். ஆனால், பாலஸ்தீன இசுலாமிய சகோதரர்கள் பட்டினியால் வதைபட்டுக் கொண்டிருக்கும் போது எந்தவொரு இசுலாமிய அரசும் உதவிக்கரம் நீட்ட முன்வரவில்லை. இந்நாடுகளின் ஆளும் கும்பல்களுக்கு இசுலாமிய சகோதரத்துவ நலன் என்று எதுவும் கிடையாது. வர்க்க நலன் மட்டும்தான் உள்ளது. அமெரிக்காவுக்கு விசுவாசமாக இருப்பதுதான் தமது வர்க்க நலனுக்குப் பாதுகாப்பானது என்பதாலேயே, இந்நாடுகளின் ஆட்சியாளர்கள் பட்டினியால் பரிதவிக்கும் பாலஸ்தீன மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் கூட உதவ முன்வரவில்லை. இருப்பினும், தமது மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் இத்துரோகிகளை அம்பலப்படுத்தி எதிர்க்கக் கூட முன்வராமல், இசுலாமிய இயக்கங்களும் மக்களும் வாய்மூடிக் கிடக்கின்றனர்.

உண்ண உணவின்றி பட்டினிச் சாவின் விளிம்பில் நிற்கும் பாலஸ்தீன மக்களுக்கு கட்டார், ஈரான், ரஷ்யா ஆகிய நாடுகள் மட்டுமே உதவ முன்வந்துள்ளன. இஸ்ரேலிய இனவெறி பயங்கரவாத அரசுடன் கூடிக் குலாவும் இந்திய அரசு தன்னை முற்போக்கு மனிதாபிமானியாகக் காட்டிக் கொள்ள அற்ப நிவாரணத் தொகை அளிக்க முன்வந்துள்ளது. உலகெங்குமுள்ள இசுலாமிய உழைக்கும் மக்களும் புரட்சிகர-ஜனநாயக சக்திகளும் பாலஸ்தீன மக்களுக்கு தம்மால் இயன்ற உணவு மற்றும் மருந்துப் பொருட்களைத் திரட்டிக் கொடுத்து வருகின்றன. இம்மனிதாபிமான உதவியில் பங்கேற்பதும் அமெரிக்க - இஸ்ரேலிய பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுவதும் உழைக்கும் மக்களின் கடமை; நம் அனைவரது சர்வதேசியக் கடமை.

•••

**ப**ட்டினிச் சாவின் விளிம்பில் பாலஸ்தீன மக்கள் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது, அதிபராக உள்ள முகமது அப்பாஸின் அல்ஃபதா குழுவும் அரசாங்கத்தை அமைத்துள்ள ஹமாஸ் குழுவும் அதிகாரப் போட்டிக்கான நாய்ச் சண்டையில் இறங்கி வெளிப்படையாகவே மோதிக் கொள்கின்றன. கைகலப்புகள், துப்பாக்கிச் சூடுகள், கொலைகள, நாடாளுமன்றத்துக்குத் தீ வைப்பது என்பதாக குழுச் சண்டைகள் முற்றி பாலஸ்தீனத்தில் உள்நாட்டுப் போர் வெடிக்கும் அபாயத்தில் உள்ளது. இந்த மோதலுக்கான காரணத்தை அறிய பாலஸ்தீன வரலாறை சற்றுப் பின்னோக்கிப் பார்ப்பது அவசியம்.

1948 முதல் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை எதிர்த்து தமது மண்ணை மீட்க பாலஸ்தீன மக்கள் தொடர்ந்து போராடி வந்த நிலையில், பாலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்குமிடையே இணக்கமாக உறவை ஏற்படுத்துவதாகவும், சுயாட்சிக்கான பாலஸ்தீன அதிகார அமைப்பைத் தோற்றுவிப்பதாகவும் கூறிக் கொண்டு அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் "ஆஸ்லோ ஒப்பந்தம்" எனப்படும் துரோக ஒப்பந்தத்தைத் திணித்தன. அதை ஏற்றுக் கொண்டு தற்காலிகத் தீர்வைத் தேடியது, அராபத் தலைமையிலான பாலஸ்தீன விடுதலை இயக்கம். ஒப்பந்தப்படி, பாலஸ்தீன அதிகார அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், அது ஒரு பஞ்சாயத்துக்கு உள்ள அதிகாரம் கூட இல்லாமல் வெறும் கொலு பொம்மையாகவே இருந்தது. மறுபுறம், ஆஸ்லோ ஒப்பந்தத்தைக் கழிப்பறைக் காகிதமாக்கி விட்டு எல்லா வகையான பயங்கரவாத அட்டூழியங்களிலும் இஸ்ரேல் இறங்கியது. பல்லாயிரக்கணக்கான


படிப்பகம்

www.padippakam.com




**காசா முனை கடற்கரைப் பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலைக் கண்டித்து, இஸ்ரேலைச் சேர்ந்த அமைதி இயக்கத்தினர் இஸ்ரேல் ராணுவத் தளபதி வீட்டின் முன் நடத்திய ஆர்ப்பாட்டம். எதிரி நாட்டில் நடந்த இத்தகைய கண்டன ஆர்ப்பாட்டங்கள் கூட, இஸ்லாமிய நாடுகளில் நடக்கவில்லை.**

பாலஸ்தீன மக்கள் வீடிழந்து வாழ்விழந்து உற்றார் - உறவினர்களை இழந்து பரிதவித்தனர். ஏகாதிபத்திய உலகமோ வாய்மூடிக் கிடந்தது.

இஸ்ரேலிய பயங்கரவாத அடக்குமுறைகளை அதிபர் அராபத் தலைமையிலான பாலஸ்தீன அதிகார அமைப்பினால் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவரது வீட்டை இஸ்ரேலியப் படைகள் முற்றுகையிட்டு அவரை வீட்டுக் கைதியாக்கிக் கொக்கரித்தன. ஆஸ்லோ ஒப்பந்தம் சவப்பெட்டியில் வைக்கப்பட்டது. பாலஸ்தீன அதிகார அமைப்போ, அவலத்தின் நடுவே ஊழலிலும் உல்லாசத்திலும் மூழ்கிக் கிடந்தது. இவற்றுக்கெதிராக எதுவும் செய்ய முடியாமல் உடல்நலம் குன்றி அராபத் மாண்டு போனார். அவரது மறைவுக்குப் பின், அவரது அல்ஃபதா குழுவைச் சேர்ந்த முகமது அப்பாஸ், அதிபர் தேர்தலில் வெற்றி பெற்று பாலஸ்தீன அதிகார அமைப்பின் அதிபராக நீடித்து வருகிறார். மிதவாதியாகச் சித்தரிக்கப்படும் அப்பாஸ், இன்னமும் பயங்கரவாத இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தை நடத்தி பாலஸ்தீன சுயாட்சி அதிகாரத்தை நிலைநாட்டிவிட முடியும் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்.

அல்ஃபதா குழுவின் சமரசங்கள், துரோகங்கள், ஊழல் மோசடிகளால் அதிருப்தியுற்று இருந்த பாலஸ்தீன மக்கள், பயங்கரவாத இயக்கமான ஹமாஸ் முதன்முறையாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டதும் அதற்கு பெருவாரியாக வாக்களித்து வெற்றி பெறச் செய்து அல்ஃபதா குழுவினரைத் தோற்கடித்துள்ளனர். அல்ஃபதா குழுவின் ஊழல் - துரோகத்தின் எதிர்விளைவுதான் ஹமாஸ் இயக்கத்தின் வெற்றியே தவிர, ஹமாஸ் இயக்கத்தின் இசுலாமிய அடிப்படைவாத சித்தாந்தத்தையும் பயங்கரவாத வழிமுறையையும் பாலஸ்தீன மக்கள் அங்கீகரித்து ஆதரிப்பதாகக் கருத முடியாது.

யாசின் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட ஹமாஸ் இயக்கம், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் இணையாமல் அதற்கு வெளியே தனித்து இயங்கி வந்தது. இசுலாமிய அடிப்படைவாத பள்ளிகள் நடத்துவது, மருத்துவமனைகளைக் கட்டுவது, நிவாரண உதவிகள் செய்வது ஆகியவற்றோடு இஸ்ரேல் மீது பல முறை தற்கொலைப் படைத்தாக்குதல்களையும் நடத்தி வந்தது. ஈராண்டுகளுக்கு முன்பு ஹமாஸ் தலைவர் யாசினை விமானத் தாக்குதல் நடத்தி இஸ்ரேல் கொன்றுவிட்டது. அதன் பிறகு போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்ட ஹமாஸ் குழு, அரசியல் நீரோட்டத்தில் கலந்து தேர்தலில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றுள்ளது. இருப்பினும், ஹமாஸ் குழுவின் படைகளை பாலஸ்தீன அதிகார அமைப்பினது படைகளுடன் இணைக்க அப்பாஸ் மறுக்கிறார். பயங்கரவாதிகளை பாலஸ்தீன இராணுவத்தில் சேர்க்க முடியாது என்கிறார்.

ஹமாஸ் இயக்கம், இஸ்ரேல் என்ற ஒரு நாடு இருப்பதையே ஏற்க முடியாது என்றும், அவர்களோடு பேச்சுவார்த்தையே கூடாது என்றும், ஆயுதப் போராட்டத்தின் மூலம் இஸ்ரேலை விரட்டியடித்துவிட்டு பாலஸ்தீன விடுதலையைச் சாதிக்க வேண்டும் என்றும் தனது கொள்கையாகக் கொண்டுள்ளது. இதைச் சாதிக்க மக்களைச் சார்ந்து நின்று அரசியல் - ஆயுதப் போராட்டங்களை நடத்துவதற்குப் பதிலாக, பயங்கரவாத - குழு சாகச நடவடிக்கைகளையே அது தனது வழிமுறையாகக் கொண்டுள்ளது.

ஆனால், அதிபரான அப்பாஸ், இஸ்ரேல் என்ற நாட்டை ஏற்றுக் கொண்டு ஆஸ்லோ ஒப்பந்தத்தை நிறைவேற்ற பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்கிறார். இதற்காக, இஸ்ரேல் என்ற நாடு இருப்பதை ஏற்று, இருநாடுகளும் பரஸ்பர தாக்குதலை நிறுத்திவிட்டு, அமைதித் தீர்வு காண்பதற்கு விழைய வேண்டும் என்ற திட்டத்துடன் வரும் ஜூலை 26-ஆம் தேதியன்று பாலஸ்தீன மக்களிடம் கருத்துக் கணிப்புத் தேர்தல் நடத்தப் போவதாக அவர் அறிவித்துள்ளார். இஸ்ரேல் என்ற நாடு இருப்பதையே ஏற்றுக் கொள்ளாத ஹமாஸ், இக்கோரிக்கையை நிராகரிக்க வேண்டும் என்று மக்களிடம் எதிர்ப் பிரச்சாரம் செய்கிறது. இதுதவிர நிதி, நிர்வாகம், நிவாரணப் பொருட்களை விநியோகித்தல் முதலான பல்வேறு விவகாரங்களில் இருதரப்பும் தீராத மோதலில் இறங்கியுள்ளன. பாலஸ்தீனத்தில் தீவிரமாகி விட்ட இக்குழுச் சண்டைகளைக் கண்டு இனவெறி பிடித்த பயங்கரவாத இஸ்ரேலும் அதன் பங்காளியான ஏகாதிபத்திய உலகமும் கைகொட்டிச் சிரிக்கிறது.

ஏகாதிபத்தியங்களுடன் சமரசம் செய்து கொண்டு போடப்படும் துரோக ஒப்பந்தத்தாலும் இடைக்காலத் தீர்வினாலும் தேசிய இன விடுதலையை ஒருபோதும் சாதிக்க முடியாது. பாட்டாளி வர்க்க சித்தாந்த தலைமையற்ற குட்டிமுதலாளிய போராளிக் குழுக்களாலோ, மத அடிப்படைவாத - பயங்கரவாத இயக்கங்களாலோ தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் முடியாது என்ற உண்மையை உலகிற்கு உணர்த்திவிட்டு பாலஸ்தீனம் பேரழிவில் புதைந்து கொண்டிருக்கிறது.

**● மனோகரன்**

**சந்தாதாரர்களின் கவனத்திற்கு...**

● *பணவிடை (M.O.) மூலம் தொகை அனுப்பும் சந்தாதாரர்கள், பணவிடைப் படிவத்தின் அடிப் பகுதியில் - தகவலுக்கான இடத்தில் தமது பெயர், முகவரியை* **அஞ்சல் குறியீட்டு எண்***ணுடன்* **தெளிவாக** *எழுதி அனுப்பவும்.*

● *சந்தாக்களை* **பிரதிமாதம்** 23-*ஆம் தேதிக்குள் எமக்குக் கிடைக்குமாறு அனுப்பவும். தாமதமாகக் கிடைக்கும் சந்தாக்களுக்கு 1-ஆம் தேதியன்று இதழை அனுப்ப இயலாது. அதற்கடுத்த இதழிலிருந்தே அனுப்பப்படும்.*

*- நிர்வாகி.*



படிப்பகம்

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

துப்பாக்கிக் குண்டுகள் துளைத்திருந்தன. இரத்தப் பெருக்காலும், வலியாலும் துடித்துக் கொண்டிருந்த எங்களைச் சிலர் மருத்துவம னைக்குத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள். 'எங் கள் குடும்பத்தை ஏன் இப்படி கொன்று போட் டீர்கள்?' என்று நான் அவர்களிடம் கேட் டேன். அதற்கு அந்த ஈராக்கிய சிப்பாய்கள், நாங்கள் செய்யவில்லை. அமெரிக்கர்கள் தான் எனச் சொன்னார்கள்.

நானும் எனது தம்பியும் அநாதைகளாகி விட்டோம். அல்லா, இந்த முறை எனது குடும் பத்தைக் காக்காமல் கைவிட்டு விட்டார்'' எனத் தனது குடும்பம் இரக்கமற்ற முறையில் சுட்டுக் கொல்லப்பட்டதை மனித உரிமை அமைப்புகளிடம் கூறியிருக்கிறார், இமான் வாலீத்.



அமெரிக்க இராணுவம் நடத்திய கொலைவெறியாட்டத்தின் இரத்த சாட்சி: இமான் வாலீத்.

ஆனால், வாலீதின் வீட்டுப் பக்கத்தில் இருந்துதான் தீவிரவாதிகள் தங்களை நோக் கிச் சுட்டதாகவும், அந்த வீட்டிற்குள் நாங்கள் நுழைந்த போது, ஏ.கே.47 துப்பாக்கிகளை இயக்கப் போகும் ஓசை கேட்டதையடுத்து தான், தங்களைத் தற்காத்துக் கொள்ள அந்த வீட்டில் இருந்த வர்களைச் சுட்டுத் தள்ளியதாகவும் கூறி, இப்படுகொலை களை நியாயப்படுத்துகிறது, அமெரிக்க இராணுவம்.

எனினும், வாலீதின் வீட்டில் இருந்து ஒரு விளையாட்டு துப்பாக்கியைக் கூட அமெரிக்க இராணுவம் கைப்பற்ற வில்லை. வாலீதின் அப்பா கையில் இருந்த குர்ஆனை ஏ.கே. 47 ஆகப் பார்க்கும் அளவிற்கு அமெரிக்க இராணுவத்தின் கண்களும், மூளையும் முசுலீம் எதிர்ப்பு வெறியில் மூழ்கிக் கிடக்கின்றன.

வாலீதின் குடும்பத்தைத் தீர்த்துக் கட்டிய பிறகு, அச்சிறு மியின் பக்கத்து வீட்டிற்குள் புகுந்த அமெரிக்க சிப்பாய்கள், அங்கிருந்த நான்கு பேரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். ''அந்த நால்வரில், ஒருவர் கையில் ஏ-கே 47 துப்பாக்கி இருந்ததாக வும்; மற்றொருவர் துப்பாக்கியை எடுத்துவர முயன்ற பொழுது அவர்கள் இருவரை மட்டும்தான் தாங்கள் சுட்டுக் கொன்றதாகவும், மற்ற இருவர் எப்படி இறந்தார்கள் என்பது தங்களுக்குத் தெரியாது'' என அமெரிக்க சிப்பாய்கள் சாதிக் கின்றனர்.

ஆனால், சுட்டுக் கொல்லப்பட்ட நால்வரின் சகோதர ரான ஆயேத், ''தனது நான்கு சகோதரர்களையும் துப்பாக்கி முனையில் மிரட்டி, ஒரே அறையில் அடைத்து வைத்து மிக வும் அருகாமையில் இருந்து அமெரிக்க சிப்பாய்கள் சுட்டுக் கொன்றதாகக் கூறுகிறார். அவர்களைக் காப்பாற்ற நான் வீட் டிற்குள் நுழைய முயன்றபொழுது, சில ஈராக்கிய சிப்பாய் கள், அமெரிக்கர்கள் உன்னையும் கொன்று விடுவார்கள் எனக் கூறித் தன்னைத் தடுத்துவிட்டதையும் சாட்சியமாகக் கூறியிருக்கிறார்'', ஆயேத்.

வாலீத், ஆயேத் குடும்பங்களின் மீது நடத்தப்பட்ட தாக்கு தலையடுத்து, மற்றொரு வீட்டின் கதவை குண்டுவீசி தகர்த்து விட்டு, அவ்வீட்டிற்குள் புகுந்த அமெரிக்க சிப்பாய்கள், அந்த வீட்டின் உரிமையாளர், அவரது மனைவி, அவரது சகோதரி, அவரது இரண்டு வயது ஆண் குழந்தை மற்றும் மூன்று பெண் குழந்தைகளைச் சுட்டுக் கொன்றனர். இதற்கும் அமெ ரிக்க சிப்பாய்கள் சொல்லியிருக்கும் காரணம் அந்த வீட்டில் இருந்து எங்களை நோக்கிச் சுட்டார்கள் என்பதுதான்.

சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் உடல்களை அமெரிக்க சிப்பாய்களே மருத்துவமனையில் சேர்த்துவிட்டு, ''அவர்கள் அனைவரும் தெருவோரம் வெடித்துச் சிதறிய வெடிகுண் டால் இறந்து போனதாக'' மருத்துவர்களிடம் கூறியுள்ளனர். அதேசமயம், பிரதேப் பரிசோதனை நடத்திய மருத்துவர் கள், ''இந்த 23 பேரில், பலரும் மிக அருகாமையில் இருந்து மார்பிலும், தலையிலும் சுடப்பட்டுக் கொல்லப்பட்டிருப் பதை'' பத்திரிகையாளர்களிடம் அம்பலப்படுத்தியுள்ளனர்.

ஹதிதாவைச் சேர்ந்த இதழியல் மாணவர் ஒருவர், தாக்கு தல் நடந்த மறுநாளே, தாக்குதல் நடந்த வீடுகளின் உட்புறத் தையும், வெளிப்புறத்தையும் ஒளிப் பேழையில் படமாகப் பதிவு செய்திருக்கிறார். ''இந்தப் படத்தைப் பார்த்தால், அமெ ரிக்க சிப்பாய்களுக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடந்ததற்கான சிறு ஆதாரத்தையும் காண முடியவில்லை'' என ஹம்முராபி மனித உரிமைக் குழு கூறி யிருக்கிறது.

இந்த ஹதிதா படுகொலைகள் உலகெங்கிலும் அம்பல மாகி, அமெரிக்க மேலாதிக்கவாதிகள் ஈராக் மீது திணித்தி ருக்கும் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் சந்தி சிரிக்க வைத்து விட்டன. இதனால் அமெரிக்க அதிபர் ஜார்ஜ்புஷ் இந்தச் சம்பவம் பற்றி விசாரிக்க அமெரிக்க இராணுவத் துக்கு உத்தரவிட்டிருக்கிறார். விசாரணை நடத்தும் அதிகாரி களோ, இந்தச் சம்பவத்தை, ''தீவிரவாதத்துக்கு எதிராக நடக் கும் போரில் ஏற்படும் துணை விளைவு'' என முத்திரை குத்தி விட முயன்று கொண்டிருக்கிறார்கள். எனவே, அமெரிக்க இராணுவம் நடத்திய கொலைகளை விசாரிக்கும் அமெரிக்க இராணுவத்தின் தீர்ப்பு எப்படியிருக்கும் என்பதை இதன் மூலம் அனுமானித்துக் கொள்ளலாம்.

ஹதிதா தாக்குதல் சம்பவத்தில் இறந்து போன ஒவ்வொ ருக்கும் 2,500 அமெரிக்க டாலர்களை (ஏறத்தாழ 1,13,000 ரூபாய்) நட்ட ஈடாக வழங்கியிருக்கிறது அமெரிக்க இராணு வம். இந்த 2,500 அமெரிக்க டாலர் ஒரு ஈராக்கிய குடி மகனின் மதிப்பு மட்டுமல்ல; அமெரிக்காவை எதிர்த்தால், உங்கள் உயிரின் விலையும் இந்த 2,500 அமெரிக்க டாலர் களைத் தாண்டாது!

● செல்வம்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regn. No: TN/CC(S)Dn/190/06-08
WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# மாற்றுப் பயிர் திட்டம்:

# விவசாயிகள் விட்டில் பூச்சிகளா?



பணப்பயிர் விளைச்சலுக்கு ஏற்ற விலை கிடைக்காததால் கடனில் மூழ்கிப் போய், அதனால் ஏற்பட்ட உயர் இரத்த அழுத்த நோய் - முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள சிறு விவசாயி சுப்பிரமணியன், தனது மனைவி மற்றும் மகளுடன்.

நாமக்கல் மாவட்டம் - இருமாபட்டி யூனியனில் உள்ள காவாக்கரன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன், ஆறேழு ஆண்டுகளுக்கு முன்பு வரை நெல் சாகுபடி செய்துவந்த சிறு விவசாயி. வீட்டுச் சாப்பாட்டுக்குத் தேவையான அரிசியும், மாடுகளுக்குத் தேவையான வைக்கோலும் நெல் சாகுபடி மூலமே கிடைத்து வந்ததால், அவர் ஓரளவு சுயதேவை பூர்த்தியடைந்த விவசாயியாக வாழ்க்கையை நடத்தி வந்தார். ஆனால், அந்த வாழ்க்கை இப்பொழுது பழங்கதையாகிவிட்டது.

2001-ஆம் ஆண்டு தொடங்கி, தொடர்ந்து தாக்கிவந்த வறட்சியால் அவர் நெல் சாகுபடியைக் கைவிட வேண்டியதாகிவிட்டது. 800 அடி தோண்டினால் தண்ணீர் கிடைக்கும் என்ற நிலையில், சுப்பிரமணியன் அங்கே இங்கே கடன் வாங்கி, கிணறு தோண்டினார். கடன் வாங்கிப் போட்ட காசு கரைந்து போனதேயொழிய, நெல் சாகுபடியைத் தொடர்ந்து செய்யும் அளவிற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை.

இதனால் தனது 3 ஏக்கர் நிலத்திலும் நிலக்கடலை, வெங்காயம் போன்ற பணப் பயிர்களைப் பயிரிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார், சுப்பிரமணியன். நெல் சாகுபடி மூலம் கிடைத்த அளவிற்குக் கூட பணப் பயிரிலிருந்து வருமானம் கிடைக்கவில்லை. உற்பத்திச் செலவுக்கு ஏற்ற விலை கிடைக்காததால், சுப்பிரமணியன் கடனில் மூழ்கிப் போனார். வாங்கிய கடனை எப்படி அடைப்பது? தனது மகளின் திருமணத்தை எப்படி நடத்துவது? என்ற மனக்கவலை அவரை அரிக்கத் தொடங்கியது. இதனால் உயர் இரத்த அழுத்தம், மனச்சோர்வு ஆகிய நோய்கள் அவருக்கு ஏற்பட்டு, அதன் விளைவாக முடக்குவாதத்தாலும் பாதிக்கப்பட்டு, இன்று அரைகுறையாக நடமாடிக் கொண்டிருக்கிறார்.

இது ஏதோ சுப்பிரமணியன் என்ற தனிப்பட்ட துரதிருஷ்டம் பிடித்த விவசாயியின் கதை அல்ல; நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பாலான விவசாயிகளின் நிலை இதுதான். 4,000 பேர் வசிக்கும் காவாக்காரன்பட்டியில் ஏறத்தாழ 70 விவசாயிகள் உயர் இரத்த அழுத்தம், மனச்சோர்வு, முடக்குவாதம் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். சிகிச்சை எடுத்துக் கொள்ளும் அளவிற்கு வருமானம் இல்லாததால், சிலர் மருத்துவம் பார்த்துக் கொள்ளாமலேயே இறந்து போய் விட்டனர்.

ஏற்றுமதி வாய்ப்புள்ள கண்வலி மலர் போன்ற பயிர்களைச் சாகுபடி செய்தால் விவசாயப் புரட்சியே நடந்துவிடும் என்பது போன்ற வர்த்தக விளம்பரங்கள் உணவுப் பயிர் விவசாயிகளைக் குறி வைத்து நடத்தப்படுகின்றன.



ஆந்திராவைப் போல, மகாராஷ்டிராவைப் போல விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் தமிழகத்தில் நடக்காமல் இருக்கலாம். ஆனால், கடன்பட்ட விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கையில் தமிழகம் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. தமிழகத்தைச் சேர்ந்த கடன் பட்டுள்ள சிறு, நடுத்தர விவசாயி ஒவ்வொருக்கும் சராசரியாக, ரூ. 25,000/- கடன் இருப்பதாக அரசின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இந்த நிலையில் தமிழக அரசு அறிவித்துள்ள கூட்டுறவுக் கடன் தள்ளுபடி என்பது விவசாயிகளை அழுத்திக் கொண்டிருக்கும் சுமைகளுள் ஒரு சிறு துரும்பை எடுத்துப் போடுவதைத் தவிர வேறொன்றுமில்லை.

விவசாயிகளைக் கந்துவட்டி கடன் சுமைக்குள்ளும், தற்கொலைச் சாவுக்குள்ளும் தள்ளும் தனியார்மய-தாராளமயப் பொருளாதாரக் கொள்கையை மாற்ற விரும்பாத ஆளும் கும்பல், விவசாயிகளைப் பணப் பயிருக்கும், ஏற்றுமதி பயிருக்கும் மாறச் சொல்கிறது. அரசாங்கத்தின் விளம்பரத்தில் மயங்கி மாறிய சுப்பிரமணியன், எழுந்து நடக்க முடியாத நோயாளி ஆகிவிட்டார். நாமக்கல் மாவட்டத்தில் 3,750 ஹெக்டேரில் நடந்து வந்த நெல் சாகுபடி அழிந்து போனது. அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட கதையாகி விட்டது மாற்றுப் பயிர்த் திட்டம்! •

படிப்பகம்